# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.






புத்தகம் 10 துர்முகி ஹூ மாசி மாதம் 6 திகதி 17-2-57 ஞாயிற்றுக்கிழமை ரஜபு பிறை 16 இதழ் 37


# "சிறீ" சட்ட மறுப்பாளரை அரசாங்கம் கைதுசெய்ய முடியாது

## வழக்குத் தொடர்ந்தால் 'சுற்றவாளி' என்று கூறுங்கள்

### மோட்டார் சட்டத்தின் வரம்பு பற்றி தமிழரசுக்கட்சி தரும் விளக்கம்

"சிறீ" சட்டமறுப்பு சம்பந்தமாக இலங்கை தமிழரசுக்கட்சியார் தமிழ் எழுத்துப் பொறித்து கார் ஓடுபவர்களை அரசாங்கம் கைது செய்யவோ, அன்றி காரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லவோ சட்டம் இடந்தராதென்றும், அப்படி யார்மீதாவது வழக்குத் தொடரப்பட்டால் அவர்கள் கோட்டில தாங்கள் சுற்றவாளிகள் என்றே கூற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் அவர்கள் கூறுவதாவது:

தமிழ்ப் பேசும் மக்கள் மீது சிங்களம் திணிக்கப்படுவதை எதிர்த்து மோட்டார் வண்டிகளின் இலக்கத் தகடுகளில் தமிழ் எழுத்துக்களை பொறித்து உபயோகிப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. சட்ட மறுப்புச் செய்வதன் நோக்கம், (1) குறிப்பிட்ட சட்டம் அநியாயமாக மக்கள் மீது திணிக்கப்பட்டது என்பதை நாட்டிலுள்ள மக்களுக்கும், வெளியுலகுக்கும் எடுத்துக் காட்டுவது (2) அந்நியை எதிர்த்து நியாயத்தை நிலை நிறுத்த முயற்சிப்பது என்பனவாகும். வழக்குத் தொடர்வதன் மூலம் அரசாங்கமே இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிவார்கள் என்பது விஷயத்தை சிறிதளவேனும் சிந்திப்பவர்களுக்கு விளங்கும்.

ஆனால் இந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்கு (ஒரு சிலர் மட்டும் பலியாகாமல் இந்தச் சட்ட மறுப்பில் தமிழ்ப்பேசும்இனம் வெற்றி பெற) சில வழிவகைகள் கையாளப்பட வேண்டியது அவசியம். இவற்றுள் சில முக்கிய குறிப்புகளைமட்டும் கீழே தருகிறோம்.

1. தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ் எழுத்துப் பொறிக்காத வண்டிகளில் ஏறுவதை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தவிர்க்க வேண்டும்.

2. தங்கள் வண்டிகளில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்க விரும்பாதவர்கள் கூடுமானவரை தங்கள் மோட்டார் வண்டிகளைச் சில காலம் உபயோகிக்காது வேறு போக்குவரத்து சாதனங்களை உபயோகிக்கலாம். மேற்கூறிய இரண்டு வழிகளாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஓடும் மோட்டார் வண்டிகளில் 100க்கு 90 வீதத்துக்கு மேல் தமிழ் எழுத்து பொறித்தவைகளாகவே ஓடச் செய்ய வேண்டும். அவ்விதம் செய்தால் அரசாங்கம் ஏறக்குறைய 6000 பேரிலாவது வழக்கு தொடரவேண்டிய நிலை ஏற்படும்.

3. தமிழ் எழுத்துப் பொறித்த வண்டிகளை ஓட்டுபவர்களிலோ அன்றி சொந்தக் காரிலோ வழக்குத் தொடர விரும்பும் எந்த பொலீஸ் அதிகாரியும் வண்டியை மறித்து ஓட்டுபவரின் பெயர், விலாசம், லைசென்ஸ் இலக்கம் முதலியவற்றைக் கேட்டுக் குறித்துக்கொள்ள முடியுமேயன்றி ஓட்டுபவரைக் கைது செய்யவோ, வண்டியை பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லவோ சட்டம் இடம் கொடுக்காது. அவ்விதம் ஏதாவது நிர்ப்பந்தம் நிகழ்ந்தால் இவ்விஷயத்தை உடனே தங்கள் பகுதியிலுள்ள தமிழரசுக் கட்சி காரியாலயத்துக்கு முழு விபரங்களுடன் (பொலீஸ் உத்தியோகஸ்தர் பெயர் இலக்கம் முதலியன உட்பட) அறிவித்தல் கொடுக்கவும்.

4. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று பொலீஸ் அதிகாரிகள் வழக்குத் தொடர்வதற்கு விபரங்கள் குறிக்க ஆரம்பித்தால் தமிழ் எழுத்துக்கள் பொறித்த எல்லா வண்டிகளையும் அவ்விடத்துக்கோ பொலீஸ் நிலையத்துக்கோ கொண்டுசென்று எல்லாக் கார்களின் விபரங்களையும் பதிவுசெய்யும்படி கார் சொந்தக்காரர்கள் கேட்க வேண்டும். இதற்கான உதவியை தொண்டர்கள் செய்வார்கள்.

5. வழக்குத் தொடர்ந்து கட்டளை கிடைத்தவுடன் தங்கள் பகுதியிலுள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்துக்கு கட்டளையைக் காண்பித்து விபரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்விதம் அறிவித்தால் தேவையான உதவி புரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

6. வழக்குத் தவணையன்று எதிரியாக நிற்பவர்கள் சுற்றவாளியென்று பதில் கூற வேண்டும் விரும்பியவர்கள் 'நான் குற்றவாளியோ அல்லது சுற்றவாளியோ என்று கூறுவதற்கில்லை. கோட்டார் இவ் வழக்கை முற்றாக விளக்கி தீர்ப்புக் கூறக் கோருகிறேன்' என்றும் கூறலாம் "குற்றவாளி" என்று கூறவேண்டாம்.

7. வேறு குறிப்புக்கள் வேண்டிய நேரத்தில் வெளியிடப்படும் மேற் கூறியவற்றை அமைதியாக சாத்வீக முறையில் அனுஷ்டிக்குமாறு வண்டி சொந்தக்காரர்களையும் பொதுமக்களையும் தாழ்மையாகக்கோருகிறோம்.



திருமலைத் தியாகி நடராஜன்

தமிழ் மொழியின் உரிமை காப்பதற்காக ஒரு சிங்கள வெறியனின் துப்பாக்கிக் குண்டுக்குத் தன் இன்னுயிரை இரையாக்கிய திருமலைத் தியாகி நடராஜனின் படத்தை ஆழ்ந்த அனுதாபத்துடன் இங்கு வெளியிடுகிறோம்.

திரு. நடராஜன் துடிக்கத் துடிக்க உயிர்விட்ட சிறிது நேரத்தில் திருகோணமலை சுதந்திரன் புகைப்படக் காரரால் இப் படம் பிரத்தியேகமாக எடுக்கப் பட்டது.

திரு. நடராஜன் குறிப்பிடக் கூடிய இனபந்துக்கள் இல்லாத ஒரு அனாதை. இவருக்கு தாயார் மட்டுந்தான் வவுனியாவில் இருக்கிறார் என்று தெரிகிறது. திரு நடராஜன் திருகோணமலையில் லிப்டன்ஸ் தேயிலை வியாபாரியாக இருந்தார் தேயிலையைத் தள்ளு வண்டியில் வைத்து விற்பனவு செய்வது தான் இவர் மேற்கொண்ட தொழில்

தொழிலில் வியாபாரமாய் இருந்த போதிலும் தமிழ் காக்குந் தொண்டில் இவர் ஓர் ஆர்வம் மிக்க இளைஞராக விளங்கினார் பெப்ரவரி 4ந் திகதியைத் துக்க தினமாகக் கொண்டு, அன்று அவர் வியாபாரத்திற்குச் செல்லாமல் ஹர்த்தால் அனுஷ்டித்து, திருகோணமலையில் தமிழரசுக் கட்சி நடத்திய மொழியுரிமை ஆர்ப்பாட்டத்தில் ஒரு தொண்டராகக் கலந்து கொண்டார்.

அனாதையான இவருடைய சடலத்தை தமிழரசுக் கட்சியின் திருகோணமலைக் கிளை கையேற்று, கட்சிக் காரியாலயத்தில் பொது மக்களின் இறுதி மரியாதைகளுக்காக வைத்திருந்து, மறு நாள் நல்லடக்கம் செய்தது.

# பட்டிருப்புப் பிரதிநிதியின் ராஜினமா ஒத்திகை

## எதிர்மன்னசிங்கத்தின் ஏமாற்றுப் புஸ்வாணம்

(நமது நிருபர்)

ஒரு "ராஜினமா" நாடகத்துக்கு ஒத்திகை நடத்துவதன் மூலம் தமது தொகுதியில் தாம் இழந்த செல்வாக்கையும் தமிழ் ஆசிரிய சமூகத்தின் அனுதாபத்தையும் பெற்றுவிடலாம் என்று பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பிலுள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இவ்வாண்டு 24 மாணவ மாணவிகளே சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களில் 100 மாணவ மாணவியர் எடுக்கப்பட்டு வந்தனர். இம்முறையும் வழக்கப்படி 100 பேர் சேர்க்கப்படாவிட்டால் தாம் அரசாங்க பாராளுமன்றக் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்துவிடப் போவதாக திரு. எதிர்மன்னசிங்கம் பிரதமர் பண்டாரநாயகாவிற்கும் கல்வி அமைச்சர் திரு. தஹநாயகாவுக்கும் அறிவித்துள்ளாராம்.

அரசாங்கம் இவர் கடிதத்தைக் கவனிக்கா விட்டால் இவர் ராஜினமாச் செய்து "பார்த்தீர்களா நான் தமிழ் ஆசிரியர்களுக்காக அரசாங்கக்கட்சியிலிருந்து ராஜினமாச் செய்து விட்டேன்" என்று பெருமையடித்துக் கொள்ளக் கூடும்.

ஆனால் நமக்கு கிடைத்திருக்கும் ஒரு அந்தரங்கச் செய்தி வேறு விதமாக இருக்கிறது. அதாவது மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரையும், மட்டக்களப்புப் பொது மக்களும் செய்துகொண்ட புகார்களை அனுசரித்து திரு. தஹநாயகா மாணவ மாணவிகளின் தொகையை கணிசமான அளவு உயர்த்த ஏற்கனவே தீர்மானித்து விட்டதாகவும், இந்த இரகசியத்தை அறிந்து கொண்ட திரு. எதிர்மன்னசிங்கம் அவசர அவசரமாக இந்த ராஜினமா புஸ் வாணத்தை விட்டிருப்பதாகவும் தெரிகிறது. அரசாங்கம் மாணவ மாணவிகள் தொகையை உயர்த்தினால், "பார்த்தீர்களா நான் எம்.ஈ.பி.யுடன் ஒத்துழைத்ததனாலே தானே இந்தக் காரியத்தைச் சாதிக்க முடிந்தது. நான் ராஜினமாச் செய்கிறேன் என்றதும் அரசாங்கம் அப்படியே கதிகலங்கி அதிகம் பிள்ளைகளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சேர்த்துக் கொண்டது" என்று கூறி ஒரு புகழைச் சம்பாதித்து விடலாமல்லவா?

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மூவர்ணக் கொடியின் ஆதிகர்த்தா காமா அம்மையார்

## பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கதிகலங்க வைத்த புரட்சிப் பெண்

### தலைவர்களுக்கெல்லாம் தலைவியாய் இருந்த இவரை இன்று பாரதம் புறக்கணிப்பதேன்?

காந்திஜீ யாருமறியா வழக்கறிஞராகவும், நேரு ஒரு மாணவனாகவும் இருக்கும்போது ஒரு பெண் அரசியல் வானில் தோன்றினார். இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பயமின்றிப் போராட்டத்தின் விளைவாக நாடு கடத்தப்பட்டு, சிறை சென்றும், ஐரோப்பா முழுதும் சென்று சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தேடினார். அந்தப் பெண் பிரிட்டிஷ் சர்க்காரின் அதிகாரத்தை மீறினார். இந்திய புரட்சிவாதிகளுக்கு வெடிகுண்டுகள் தயாரிக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தார். வருடக் கணக்காகச் சுதந்திரப்போராட்டத்திற்குத் தூண்டுதலாகவும் சுதந்திர வீரர்களைச் சேர்க்கக் காரணமாகவிருந்த மூவர்ணக்கொடியைத் தந்தவரும் இவரே.

சுதந்திர இந்தியா உணர்ச்சியற்று மறந்த இந்த பயமற்ற புரட்சிவாதியின் பெயர்தான் பிகாய்ஜி காமா அம்மையார்.

#### இளமை ஆர்வம்

சேத் சோராப்ஜி பிரேம்ஜி பேட்டல் என்னும் வர்த்தகருக்கு மகளாக, ஒரு நடுத்தர வகுப்பில் பம்பாயில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தார். ஆயினும் வாழ்க்கையின் கலையைப் பற்றியும், வாழும் விதத்தைப்பற்றியும் மிகப் பழக்கப்பட்டிருந்தார்.

"பிக்கு" என வீட்டில் அழைக்கப்பட்டுவந்த இவர் இளமையிலே சமூக சேவையில் ஆர்வம் கொண்டிருந்தார். மக்களின் வறுமை, பட்டினியால் வாடும் குழந்தைகள், பக்கள் உதவியின்றித் தவிக்கும் நிலை, பிரிட்டிஷ் சர்க்கார் மக்கள்மேல் கையாண்ட அடக்குமுறை இவைகளெல்லாம் அம்மையாரின் மனதில் ஆர்வத்தை ஊட்டியது.

#### 25 வயதில் அரசியலில்

இந்திய தேசிய காங்கிரஸ் முதன் முதலாக அதன் மகாநாட்டை 1885-ல் கூட்டிய போது 'பிக்கு'விற்கு இருபது வயதுகூட ஆகவில்லை. ஆயினும் மக்கள் அன்னிய ஆட்சியினால் நசுக்கப்பட்டு, புத்துணர்ச்சி பெறுவதால் ஒவ்வொரு ஆண், பெண், குழந்தையும் அன்னிய ஆட்சிக்கு எதிராகப் புரட்சிசெய்து சர்க்காரைக் கவிழ்க்கவேண்டுமென வற்புறுத்தினார். ஆனால், ஆண்களில் தைரியசாலிகள்கூட தலைமைதாங்கப் பயந்தனர். பெண்களோ அடுப்பங்கரையும், 'பர்தாவும்'தான் தஞ்சமென இருந்தனர் அதே நேரத்தில் தான் "பிக்கு" பல மாதர் சங்கங்களையும், சமூகசேவைகளையும் செய்து இந்தியமாதரிடை தேசிய உணர்ச்சியை ஊட்டினார்.

#### நாடுகடத்தல்

அம்மையார் பருவமடைந்தபோது, அன்னார் அரசியல், சமூகசேவைகளில் ஈடுபடுவதைக்கண்டு அஞ்சிய தகப்பனார், தடுப்பதற்காக அவரை திரு ரஸ்டம் காமா எனும் செல்வந்தருக்கு விவாகம் செய்து வைத்தார். ஆனாலும் அம்மையாரின் அரசியல் ஆர்வங்களைத் தடுக்க முடியாதுபோய்விட்டது.

துர்—அதிர்ஷ்ட வசமாக அம்மையாரின் அரசியல் ஆர்வம் கணவனிற்கும் தனக்குமிடையில் பிளவையுண்டுபண்ணியது. இந்த நேரத்தில், தான் சுகயீனமடையவே வைத்தியம் செய்வதற்காக இலண்டன் பயணமானார். அங்கு சத்திர சிகிச்சைக்குள்ளாகி குணமடைந்து தாயகம் திருப்பவிருக்கும்போது ஒரு பேரிடி விழுந்தது. இதன் பொருட்டு 35 வருடகாலம் நாடு கடத்தப்பட்டவராயிருந்தார்.

#### பிரான்ஸ் வாசம்

ஒருநாள், எதிர்பாராது சியாம்ஜி கிருஷ்ண வர்மா எனும் புகழ்பெற்ற புரட்சிவாதியைச் சந்தித்தார். அவர் அங்கு இந்தியாவின் சுதந்திர இயக்கத்திற்கு பிரிட்டிஷ் மக்களின் அனுதாபத்தைத் திரட்டிவந்தார். அவரின் புரட்சிகரமான பேச்சுவன்மை அம்மையாரின் மனதைக் கவர்ந்து, அவரின் தேசாபிமானத்திற்கும் தூண்டுதலாயிருந்தது.

சில நாட்களுள் அம்மையாரே இலண்டனிலுள்ள ஹைட்பார்க்கில் பிரசங்கங்களாற்றத் துவங்கிவிட்டார். அவர் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பற்றி தாக்குதலுக்குமேல் தாக்கும்போதெல்லாம் இலண்டன் வாசிகள் அதிசயித்துப்போய் கல்லாய் நின்றனர். இது பிரிட்டிஷ் யுத்தப்-பிரவுக்களுக்கு எரிச்சலைக்கொடுத்தது, மூளையைக் கலக்கியது. முதலில் காமா அம்மையார் நாட்டைவிட்டுப்போய்விடும்படியும், பின் பயமுறுத்தியும், பிறகு அவரைத் தாக்குவதற்காகவும் பயமுறுத்தினர்.

வெறியர்கள் தாக்குமுன் இங்கிலிஷ் கால்வாயைத் தாண்டி பிரான்சுக்குத் தப்பிவிட்டார். அழகிய நகராகிய பாரிஸைத்தனது வீடாக்கிக் கொண்டார். 'அஞ்ஞானவாசம்' செய்த 30 வருடங்களிலும் இந்தியாவின் சுதந்திர வீரர்களுக்கு ஆர்வம் ஊட்டும் செய்திகளையும் புத்தகங்களையும் பிரசுரிப்பதிலும் பிரான்சு, ருஷ்ய புரட்சிவாதிகளைக் கலந்து ஆலோசிப்பதிலும், ஐரோப்பாமுழுதும் சென்று இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் தவறுதல்களைப்பற்றி பிரசாரஞ்செய்து சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தேடினார். இது ஒரு புரட்சியையே ஆரம்பிக்கும் போலிருந்தது.

#### வந்தே மாதரம் பத்திரிகை

அம்மையாரின் பிரசாரங்களைக்கேட்டு அஞ்சிய பிரிட்டிஷ் சர்க்கார், அவரை உடனடியாகத் தங்களிடம் ஒப்புவிக்குமாறு பிரான்ஸைக் கேட்டுக்கொண்டது. ஆனால் பிரான்ஸ் இந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. செய்வதென்னவென்றறியாத பிரிட்டிஷ் சர்வாதிகாரம் அம்மை

(6-ம் பக்கம் பார்க்க)



பேராதனை சர்வகலாசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் அடங்கிய கோஷ்டி கண்டி பிள்ளையார் கோவிலுக்கு முன் கடந்த நாலாந் திகதியன்று 24 மணி நேர உண்ணாவிரதம் இருந்து துக்கம் அனுஷ்டிப்பதை இப்படத்தில் காணலாம். மத்தியில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும், கலாநிதி திரு. சு. வித்தியானந்தனும் அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம்

## நாற்றிசையிலிருந்தும் 4-ந் திகதிச் செய்திகள்

#### வட்டகொடை

வட்டகொடையில் சிங்கள மக்கள் சிங்கக் கொடியையும் சிங்கள சிறீ பொறித்த நீலக் கொடிகளையும் பறக்கவிட்டிருந்தபோதிலும் இங்குள்ள தமிழ் பேசும் மக்கள் கறுப்புக் கொடிகளை தங்கள் இடங்களில் கட்டி நாலாந் திகதியைத் துக்க தினமாக அனுஷ்டித்தார்கள்.

சிறீ பொறித்த கொடிகள் காணப்பட்டதும் தமிழ் பேசும் மக்களிடையே சிறிது பரபரப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக இங்குள்ள மக்கள் சிங்கள சிறீ பகிஷ்காரத்தை நடத்த ஆலோசித்துள்ளார்கள். காங்கிரஸ் கமிட்டிகள் கூடி மக்கள் சிங்கள சிறீ கொடியேற்றிய கடைகளையும் சிங்கள சிறீ மோட்டார்களையும் பகிஷ்கரிக்கும் ஓர் திட்டத்தை உருவாக்கி வருகின்றன.

#### காங்கேசந்துறை

காங்கேசந்துறை அரசினர் காச நோய் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் ஆஸ்பத்திரி அதிகாரிகளின் பலத்த எதிர்ப்புக்கும் ஏற்பட்ட இன்னல்களுக்குமிடையே கடந்த நாலாந் திகதியைத் துக்க தினமாக அனுஷ்டித்தனர்.

கறுப்புக் கொடிகளைக் கட்டியும் சிலர் உண்ணாவிரதம் இருந்தும் துக்கம் அனுஷ்டித்தனர். பெண்நோயாளர் [illegible] துக்கத்தைத் தெரிவித்தனர்.

#### பேராதனை

இலங்கைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் கடந்த 4ந் திகதியை உண்ணாவிரதமிருந்து துக்க தினமாக அனுஷ்டித்தனர். ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்கிய சுமார் 200 பேரைக் கொண்ட இக் கோஷ்டியில் மலைநாட்டுத் தமிழரும் நியாயபுத்தியும் தமிழபிமானமுமுள்ள சிங்கள மக்கள் சிலரும் சேர்ந்து கொண்டனர். உண்ணாவிரதம் கண்டி பிள்ளையார் கோவிலில் 24 மணி நேரம் நடந்தது.

பல்கலைக் கழக மாணவிகள் சுமார் 100 பேர் தமது கலாசாலை விடுதியில் உண்ணாவிரதம் இருந்து துக்கம் அனுஷ்டித்தார்கள்.

#### வல்வெட்டித்துறை

கடந்த 4-ந் திகதி வல்வெட்டித்துறை மக்களால் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டது. இங்குள்ள கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் எங்கும் காட்சியளித்தன. பஸ் போக்கு வரத்து ஸ்தம்பித்தது.

வல்வெட்டித்துறை பட்டின சங்க ஆதரவோடு தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியினரால் துக்கதினத்தையொட்டி ஓர் ஊர்வலமும் நடத்தப்பட்டது. பிரஜாவுரிமைச் சட்டம், சிங்களம் மட்டும் மசோதா, சோல்பரி அரசியல் திட்டம் ஆகியவற்றைப் பொருந்தொகையானோர் பாடையில் [illegible] ஊர்வலமாகப் பிரதான வீதிகள் வழியாக திரு கே. துரைரத்தினம் தலைமையில் எடுத்துச் சென்றனர். பாடையை வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்துத் தீ மூட்டப்பட்டது.

#### தோப்பு

நீர்கொழும்பைச் சேர்ந்த தோப்பில் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம், தோப்பு பாரதி கலாமன்றம் ஆகிய ஸ்தாபனங்களின் ஆதரவில் கடந்த 4-ந் திகதி துக்க தின அனுஷ்டானம் நடைபெற்றது. அன்று கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் எங்கும் கட்டப்பட்டிருந்தன.

மாலையில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கூட்டத்தில் பிரஜாவுரிமைச்சட்டம், சிங்களம் மட்டும் சட்டம், சோல்பரி அரசியல் திட்டம் ஆதியன மனிதனுக உருவகப்படுத்தப்பட்டுக் கொடும்பாவியாகக் கட்டிக் கொளுத்தப்பட்டன. கூட்டத்தில் திருவாளர்கள் பி. ஜே. பீரிஸ், ஜே. பி சில்வா, எவு சேவியஸ், பி. ஏ. பெர்னுன்டோபிள்ளை, உட்படப் பலர் பேசினார்கள்.

#### மானிப்பாய்

மானிப்பாய் பட்டின சபைக்காரியாலயம் உட்பட அனேக பொது ஸ்தாபனக் கட்டடங்களிலும், கடைகளிலும் மற்றும் வீடுகளிலும் கறுப்புக் கொடிகளைக் கட்டி இங்குள்ள மக்கள் கடந்த 4-ந்திகதியைத் துக்க தினமாக அனுஷ்டித்தார்கள்.

பட்டினசபைத் தலைவரும், உபதலைவரும் முன்னின்று பெரியதோர் துக்கதின ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலத்தில் தனிச் சிங்கள மசோதாவும் சோல்பரி அரசியல் திட்டமும் பிரேதப் பெட்டியில் வைத்து எடுத்துச் செல்லப்பட்டது. மயானத்தில் அவைகளைத் தகனம் செய்யப்படுமுன் ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல், கால், கை, மூட்டுகளில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்புவலி, நெஞ்சுவலி, சிரங்கு, படர்தாமரை, சொறி, தேமல், நெஞ்செரிவு, தேகம்காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்தமயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எஸ். பொன்னையா.

ஆனந்தா வைத்தியசாலை

நிர் 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியின் படை ஏறிட்டுப் பாய்கையில்

# உள்ள கோட்டையை இடித்துப் புதுக் கோட்டை கட்டுவது தான் புத்தியா?

## புதிய அரசியல் கட்சியை ஆக்குவதும் ஆக்கவேண்டுமென்று ஆசிப்பதும் பேதமை

### தலைமைக்காகக் கட்சியமைக்காமல் வளர்ந்த கட்சியில் அனைவரும் ஒன்றுபடுவோம்

இன்றைய தமிழினத்தின் அபாயமான நிலைமைகண்டு தமிழின அறிஞர்கள், அபிமானிகள், அனுதாபிகள் மிகவும் கவலையடைந்துதாலிருக்கிறார்கள். அவர்களுட் சிலர் இப்போதைய கட்சிகளையெல்லாம் ஒழித்துக்கட்டிவிட்டு எல்லோரும் ஒன்று சேர்ந்த "ஐக்கிய முன்னணி" போன்ற ஓர் புதிய இயக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று அடிக்கடி எழுதியும், பேசியும் வருகிறார்கள். இவர்கள் உண்மையான ஆர்வத்தினால்தான் அப்படிச் செய்கிறார்களா? அல்லது இன்னோர் கட்சியின் வளர்ச்சியிற் கொண்ட பொருமையினால் அப்படி எண்ணுகிறார்களா? என்று அடிக்கடி சிந்திக்கவேண்டியிருக்கிறது.

#### புதியகட்சி

இன்றிருக்கும் கட்சிகளையெல்லாம் முற்றாகக்கலைத்துவிட்டு புதிதாக உண்டாகுவது கோட்டையா? கொத்தளமா? அரண்மனையா! பீரங்கியா? என்று கேட்க விரும்புகிறேன். அதுவும் கட்சியாக இருக்கமுடியுமேயன்றி வேறொன்றாக இருக்கமுடியாது. அதற்குத் தலைவர்களைப் புதிதாக தேடிப்பிடிப்பதிலும், சங்கடங்களை வகுப்பதிலும், திட்டங்களைத் தீட்டுவதிலும் எவ்வளவு முரண்பாடுகள் ஏற்படும். எவ்வளவு காலதாமதங்களேற்படும்? அக்கட்சி உருப்பெற்றெழுவதற்கு எவ்வளவு பணச் செலவு தானேற்படும். புதிய ஓர் கட்சி உண்டாகிவிட்டதாமென்றால் தமிழின முழுவதும் அதில் சேர்ந்துவிட்டதென்றாகிவிடுமா?

#### உருப்படுமா?

தமிழினமக்களாகிய முஸ்லிம்கள், இந்துக்கள், இந்துக்களாகியோர் கட்சியின் சொல்முறை, நடைமுறை என்பவற்றைக் கண்டு அது தங்களுக்கு பிடித்த ஒமன


★ G. C. E. பரீட்சை (ஆங்கிலமும், தமிழும்)

★ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பிரவேசப் பரீட்சை

ஆகிய வகுப்புகளுக்கு, தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ மேல் வகுப்புகளுக்கு ஆங்கில, தமிழ்க் கட்டுரைப் புத்தகம் ஒவ்வொன்றின் விலை ரூ. 3-00.

★ ஆங்கிலம்

★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

விபரங்களுக்கு:

சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி 1398,
கொழும்பு.


ருல் சிறிது சிறிதாகக் கட்சியிற்சேர எவ்வளவு காலந்தான் சென்றுவிடும் அப்படியான கட்சி வளர்ச்சிக்குத் தங்களைப்பரித்தியாகம் செய்துழைக்க முன்வருபவர்கள் தான் எத்தனைபேர். அப்படித்தான் அக்கட்சி இயங்கிக் கொண்டிருந்தாலும் "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற தான்தோன்றித் தலைவர்களால் அக்கட்சி பிளவுபட்டு "கோட்டைக்குள்ளே குத்துவெட்டு"ப் பட்டு அலங்கோலமடைந்து நிர்மூலமாகாதென்பதற்குத் தான் என்ன ஆதாரமுண்டு? இடையிடையே சில அரசியலறிஞர்கள் "ஐக்கிய முன்னணி"யை உருவாக்க எடுத்த முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தன என்ற உண்மைகளை உள்ளத்தில் ஒன்று வாக்கிலொன்று இல்லாத நிலைமையில் ஆராய்ந்தால் அப்படி ஒன்று உருப்படாதென்பதும் புலப்படுமன்றோ.

#### எதற்கும் அஞ்சோம்

தமிழினத்தின் தேசத்திற்கும், வேதத்திற்கும் சிங்கள சமூகத்தால் ஆபத்து வந்துவிட்டதே என்று நாம், ஏன் அச்சமும்,கவலையும்கொள்ள வேண்டும். பல தேசங்களிற் சென்ற கால சரித்திரங்களையும், ஏன் நமது பண்டைய இலங்கைச் சரித்திரத்தைதானும் சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் "உலகம் பலவிதம் அதில் இதுவும் ஒருவிதம்" என்பதைக் கண்டுகொள்வோம். மனச்சாட்சியின் கூற்றப்படி நாம் நடந்தால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லையே. கஷ்டங்களையும், துன்பங்களையும் அவசியமானபோது மரணத்தையும் அனுபவிக்கத்தானே இப் பூவுலகில் மானிடராய்ப் பிறந்தோம்.

அரசியற் கொந்தளிப் பேற்படும் ஒவ்வோர் தேசங்களிலும் பல கட்சிகள் தோன்றுவது இயற்கையே. ஆனால் ஒரே கட்சி மாத்திரம் தோன்ற வேண்டுமென்று நாம் ஆசித்தாலும் அது அரசியல் அனுபவ அறிஞர்கள் ஒப்புக் கொள்ளத்தக்க உண்மையாகாது. அது ஐந்து விரல்களும் ஒரே அளவாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஒக்கும்.

#### கட்சிகள்பல இலட்சியம் ஒன்று

இந்திய உப கண்டத்தையும் அதன் சுதந்திரத்தையும் நமது ஞாபகத்திற்குக் கொண்டு வருவோமானால் 1947-ம் ஆண்டுக்கு முன் இந்தியாவில் எத்தனையோ கட்சிகளிருந்தன. அவைகளின் அடிப்படைக் கொள்கை "சுயராச்சியம்" என்பதாக இருந்தாலும் கட்சிகளின் போக்குவாக்குக

டானியல் ரேச்

வில் ஒழுங்குகளில் பல்வேறு பாடுகளிருந்தன. எனினும் இந்திய காங்கிரஸ் என்ற ஒரே ஒரு கட்சிதான் ஏராளமான மக்களின் அபிமானத்துடன் வளர்ச்சியடைந்தது அதிலிருந்து சுபாஸ் சந்திர போஸ் விலகினர், இராஜாஜி விலகிவேறோர் கட்சியை அமைத்தார் என்றும் அறுபது ஆண்டுக்கு முன் அஸ்திவாரமிடப்பட்டு உண்மை, நேர்மை, அஹிம்சை, ஆற்றல் எனும் குண இலட்சணங்களமைந்த காந்திஜியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி ஒன்றுல்தான் சுதந்திரத்தைஅடைய முடிந்தது.

#### கட்டுப்பாடுள்ள கட்சி அவசியம்

ஆதலால் கட்சி அமைக்காமல் தனிப்பட்ட மனிதர்கள் எவ்வளவு திறமைசாலிகளானாலும், சிறப்புடையோர்களானாலும் அவர்களால் ஓர் இயக்கத்தை நிறுவவும் இலட்சியத்தை அடையவும் முடியாது அவர்களின் பதவிகள் செட்டை கட்டிப்பறக்க நிலைமைகள் அடிபாற அவர்களது பெயர்களே மக்கள் மத்தியினின்றும் விடைபெறுதல்கன்றுவிடும். சென்ற பாராளுமன்றத்திலிருந்த பல (தமிழ்ப்) பிரதிநிதிகளெங்கே? கட்சிகள் தானும் உண்மை, நேர்மை, தியாகம் என்ற அடிப்படையிலமையாவிட்டால் "உலக்கை தேய்ந்து உளிப்பிடியான"தையே காண்கிறோம்.

#### விசித்திர புத்தி

நமது எதிரிகள் வந்து நமது (தமிழ் நாட்டு) எல்லையில் பாசறை அமைத்துக்கொண்டிருக்கும்போது வலிமையில் ஆயுத அணிகளுள்ள கோட்டையைச் சிறந்த முறையில் அரண்செய்து எதிர்ப்பதற்குத் தயாராகாமல் கோட்டையில் ஓட்டைகள் உலவுவதைக் கண்டு அதைத் தகர்த்தெறிந்துவிட்டுப் புதிதாக ஓர் சிறந்த கோட்டையைக் கட்டுவோம் ஆயுதங்களைச் சேகரிப்போமென்ற கூற்றுப் போன்றதுதான் உள்ளத்தில் நல்ல கட்சியைத் தேர்ந்தெடுக்காமல் எல்லாவற்றையும் குலைத்துவிட்டுப் புதிதாகஓர் கட்சியை ஏற்படுத்தக் கூறுபவர்களின் கூற்றுமாகும்

#### தமிழரசுக்கட்சி

இப்படிப்பட்ட மாரீசமான கூட்டங்களைக் கண்டு மயங்கவேண்டாமென்று பண்டைய காவியங்கள் நமக்குப் படிப்பிக்கின்றன.

வெள்ளம் வந்தபின் அணைக்கு அஸ்திவாரமிடுவதிலும் வருமுன்னிருந்த அணையைக் கட்டிப் பலப்படுத்துங்களென்று நமது நீதி நூல்கள் கூறுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)



கடந்த நாலாந்திகதியைத் துக்க தினமாக அநுஷ்டிக்கு முகமாக உருவகப்படுத்தப்பட்ட பிரஜா உரிமைச் சட்டம், சிங்களம் மட்டும் மசோதா, சோல்பரி அரசியல் திட்டம் ஆகியவற்றைக் கொடும்பாவி கட்டிப் பிணப்பறை கொட்டக் கொடிகாமம் சாவகச்சேரி மக்கள் கழுதை மீது ஊர்வலமாக எடுத்துச் சென்று மயானத்தில் கொளுத்தினர். கொடும்பாவியைச் சுமந்த கழுதையும், ஊர்வலத்தில் பங்குபற்றிய பெருந் தொகையான மக்களையும் படத்தில் காண்க

# கழுதை சுமந்த கொடும்பாவிகள்

## தென்மராட்சியில் துக்கதின அனுஷ்டானம்

"பொறுமையின் பொக்கிஷமாய் இருந்த தமிழ்ப்பேசும் மக்களின் இதயம் இன்று எரிமலையாகிவிட்டதென்பதையே இன்றைய நிகழ்ச்சிகள் ஆட்சியாளருக்கு எடுத்துக்காட்டுகின்றன. பேசும் மொழியை இழந்து —அடிப்படை மனித உரிமைகளை இழந்து அரசியல் அடிமைகளாக வாழத் தமிழ்ப் பேசும் மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். மொழியைக் காக்க, இனத்தை அடிமைத்தளையிலிருந்து மீட்க தமிழ்ப் பேசும் மக்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராகிவிட்டார்களென்பதை ஆட்சியாளர் இன்ருவது அறிந்துகொள்ளத் தவறமாட்டார்கள்" என்று சாவகச்சேரி எம். பி. திரு நவரத்தினம் கடந்த நாலாந்திகதி துக்கதின அனுஷ்டானக் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார்.

தென்மராட்சித் தமிழ்ப் பேசும் மக்கள் கடந்த 4-ந் திகதியைப் பூரண துக்கதினமாக அனுஷ்டித்தார்கள். பார்த்தவிடமெல்லாம்கறுப்புக்கொடி பறந்துகொண்டிருந்தது. சந்தைகள் கூடவில்லை. வழமையான பஸ் போக்குவரத்து ... ம் தமிழ் காக்கப்புறப்பட்ட தமிழ்த் தாய்மார்கள் தனயன்களின் ஊர்வலங்களைத் தவிர மற்றப்படி எந்த விதமான ஜனநாட்டமுமே கிடையாது. திக்கெல்லாம் பிணப்பறையோசை முழங்கியது. "எம். ஈ. பி இனவெறி ஆட்சி ஒழிக!!!" என்ற உரிமைக் கோஷங்கள் வானைப்பிளந்தன. இந்த நிலை தென்மராட்சிப் பகுதியெங்கும் வியாபித்திருந்தது.

கொடிகாமம் சாவகச்சேரி மக்கள் சாவகச்சேரித் தொகுதி எம். பி திரு நவரத்தினத்தின் தலைமையில் பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினர். சோல்பரி ஒற்றை ஆட்சி அரசியல் சட்டம் சிங்களம்மட்டும் மசோதா, பிரஜா உரிமைச் சட்டம் ஆகியவற்றை உருவகப்படுத்திக் கொடும்பாவிகளாகக் கட்டி அவற்றை ஊர்வலத்தில்பறைகொட்டி ஒப்பாரிவைத்து எடுத்துச் சென்று மயானத்தில் கொளுத்தினர். அவ்வமயம் பேசும்போதே திரு நவரத்தினம் எம். பி. முதலில் சொன்னவாறு பேசினார். பெண்களும் அடங்கிய இந்த ஊர்வலத்தில் சகல கிராமங்களிலுமிருந்து வந்த மக்கள் கலந்துகொண்டனர்.


# கமலா பீடி

ஒளியில் சிறந்தது
சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது
கமலா பீடியே!!

ஒருமுறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

போன் 3597 6522

கமலா ஸ்றோர்ஸ்,
நிர். 10, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

தந்தி: "தாமரை"


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பிலே காணப்படும்

# கரை கடந்த உற்சாகம்

## 'சிறீயை எதிர்ப்போம்-சிறையை நிறைப்போம்' எனத் திரண்டுள்ள மக்கள் ஆதரவு

---o---

## இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது

(நமது விசேஷ நிருபர் 'தேன்மொழி')

நினைத்தாலே நெஞ்சு உணர்ச்சியினால் நிரம்புகின்றது! அரசியல் துறையிலே ஆர்வமற்றவர்களாக இருந்த மட்டக்களப்புத் தமிழக மக்களுக்கு ஒரு அரசாங்க சட்டத்தையே எதிர்க்கும் திறம் எப்படித் திடீரென ஏற்பட்டது? வீடுகளிலே அடைக்கலமாகக் கிடந்த பெண்கள் தங்கள் எதிர்ப்பை ஆண்களுடன் சேர்ந்து எவ்வளவு உறுதியுடன் காட்டினார்கள்...! மட்டக்களப்பு மைதானத்திலே ஒரு அரசியல் கூட்டம் நடைபெறுவதானால், இருநூறுக்கு மேற்பட்ட மக்கள் திரளுவதில்லையே! இப்போது ஐயாயிரம், பத்தாயிரம் என மக்கள் திரண்டுவரக் காரணமென்ன?

ஆமாம்! தமிழ்பேசும் மக்கள், குறிப்பாகக் கிழக்கிலங்கை மக்கள் விழித்துக்கொண்டுவிட்டார்கள்! தமக்கும் மொழிக்கும், தமது நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள பயங்கர ஆபத்தை அவர்கள் உணர்ந்துவிட்டார்கள்...... அவர்களின் சுதந்திரப் போராட்டப் பாதையை இனி எந்தச் சக்தியினாலும் தடைசெய்ய முடியாது......

மட்டக்களப்பிலே இத்தனை உற்சாகம், உணர்ச்சி, உறுதி காணப்படுவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு! இதைத்தான் "அநியாயம்செய்யும் இந்தச் சர்க்கார் உத்தியோகம் இனி எனக்கு வேண்டாம்" எனத் தமது கூட்டுறவுக் கமிஷனர் பதவியை உதறித்தள்ளிய திரு எம் மாணிக்கம் "இதுவரையில் மட்டக்களப்பின் பாராளுமன்றப் பிரதிநிதியாயிருந்தவர்கள் தமிழுக்காகவோ மக்களுடன் கலந்தோ மக்களுக்காக உழைக்கவில்லை! ஆனால் மட்டக்களப்பு மக்களை தட்டி எழுப்பி அதோபார் தமிழகம், சிங்களமயமாகிறது என்று காட்டி, மொழிக்காக— தமிழர் அந்தஸ்துக்காக தினமும் உழைத்து வரும் திரு செ. இராசதுரை தமது கடமையைச் செய்துவருவதுதான் மட்டக்களப்பிலே காணப்படும் புது எழுச்சிக்குக் காரணம்" என்று ஒருநாள் வர்ணித்தார்! அது முற்றிலும் உண்மைதான்!

எது நேர்ந்தாலும் எமக்கென்ன என்று சுயநலமாக மாதாமாதம் மக்கள் பணமாக ஐநூற்றைச் கவைத்த பிரதிநிதிகளை மட்டக்களப்பு மக்கள் கண்டார்களே ஒழிய திரு செ. இராசதுரை போன்ற ஒரு தன்னலமற்ற தீரரை இதுவரையில் அவர்கள் காணவேயில்லையல்லவா?

கடந்த ஜனவரி மாதம் 19-ந் திகதி சிங்கள "சிறீ" எதிர்ப்பு இயக்கம் ஆரம்பமானதல்லவா? அன்று தொட்டு இன்றுவரை இயக்கம் கரைகடந்த உற்சாகத்துடன் நடைபெற்று வருகின்றது......

### பெண்கள்

இந்த எதிர்ப்பு இயக்கத்திலே மட்டக்களப்பிலேயுள்ள பெண்கள் அற்புதமாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். இயக்க நோக்கங்கொண்டு நிறுவப்பட்ட பெண் தொண்டர் படையிலே சுமார் 300 பெண் தொண்டர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்! 'இரும்பு மனிதர்' டாக்டர் நாகநாதனின் சகோதரியான திருமதி உலகசேகரம் தலைமையில் இத்தொண்டர் படை இயங்கி வருகின்றது! இவர்களில்— திருமதி வள்ளியம்மை குமாரசாமி காட்டும் அன்பு கனிந்த பேராதரவை கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும்! தமக்குச் சொந்தமான 3 மோட்டார் கார்கள், 8 வான்கள் எல்லாவற்றிலும் தமிழைப் பொறித்து இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்தார் இந்தப் பெண்மணி!

பெண்கள் ஊர்வலமா? அங்கே ஒரு இளம் பெண்ணை முன் வரிசையிலே காணலாம் அவர்தான் செல்வி மாணிக்கம்...... அவரது தலைமையில் சுமார் 200 மாணவிகளை 'சிறீ'யை எதிர்க்க மட்டக்களப்பிலே திரண்டார்கள்......

### மாணவர்கள்

மட்டக்களப்பு மாணவ மன்றத்தினர் எதிர்ப்பு இயக்கத்திலே காட்டும் பேராதரவைச் சொல்லவே முடியாது! ஒருதடவை ஓடிவந்த ஒரு சிங்கள 'சிறீ' லாரியின் முன் 16 பேர் விழுந்து சத்தியாக்கிரகம் செய்தார்கள்! அத்தனைபேரும் மாணவ மன்ற அங்கத்தவர்கள் என்றால் அவர்கள் உணர்ச்சியைப் பார்த்துக்கொள்ளுங்களேன்!

### தொண்டர் படை

இயக்கத்திற்கு முதுகெலும்புபோல, தொண்டர்படை திரு இரா பத்மநாதன் தலைமையில் பணியாற்றி வருகின்றது. சுமார் 500 தொண்டர்கள் இப்படையிலே இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் தொடர் இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தொண்டர்படை, பல அணிகளாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வோர் அணிக்கும் ஒவ்வொரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தொண்டர் படையினருக்கு தமிழ்க்கரும் உடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது காயும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், உறைகும் ராவிலும் நின்று இவர்கள் புரியும் பணிக்கு ஈடு உண்டோ என்னே? அவர்களை எப்படித்தான் பாராட்டுவது? வாழ்க அவர்கள் உணர்ச்சி......' என்று மட்டும் சொல்லி வைப்போம்...

### தமிழர் நகரசபை

தமிழர் போராட்டங்களைப் பொறுத்தமட்டில் மட்டக்களப்பு நகரசபை கடந்த காலத்தில் அநேகமாக மௌனமே சாதித்தது. ஆனால் இப்போது நடப்பதை எழுத பேனாவே பெருமைப்படுகிறது! முதன்முதலாக நகரசபைக்குச் சொந்தமான வாகனங்களில் தமிழ் இலக்கங்களைப் பொறித்த பெருமை மட்டக்களப்பு நகரசபையையே சார்ந்ததல்லவா......? நகரசபைத் தலைவர் திரு ஏ. எஸ். டி. கனகசபை இருக்கின்றாரே... சற்று வயது சென்றவரானாலும் குமரனைப்போல அவர் செய்யும் பணிகளைக் கண்டு வியப்படையாமலிருக்க முடியுமா?


மாஜி நகரசபைத் தலைவர் தமிழ் இலக்கம் போடத் துணிவில்லாமல் தமது பழைய காரைப் பூட்டி வைக்க, இவர்— தற்போதைய தலைவர் 'புறப்படுங்கள்! வீரப்போருக்கு!' என்று கூறுவதைப் பாராட்டாமலிருக்க முடியுமா?

நகரசபைத் தலைவரின் சொல்களுக்கு ஆதரவாக புதிய அங்கத்தவர்களும் இருந்து எதிர்ப்புப் போராட்டத்திற்கு உயிர் கொடுத்து வருகின்றார்கள்.

### பாராட்டுக்கு உரியவர்கள்

சிங்கள 'சிறீ' எதிர்ப்பு இயக்கம் இன்றுவரை மட்

(18-ம் பக்கம் பார்க்க)



மன்னார் நகரசபை முன்றலில் கடந்த நாலாந் திகதி நகரசபைத் தலைவர் திரு. அபுல் காசிம் மரைக்கார் ஜே. பி. கறுப்புக்கொடியேற்றி வைத்தபோது எடுக்கப்பட்ட படம் முன்னாள் கிராமக் கோட்டு நீதிபதி திரு ஜேம்ஸையும் படத்தில் காணலாம்.

## உரிமைக்காக இரு சமூகத்தினரும் ஒருமித்துப் போராடவேண்டும்

---o---

### துக்கதினத்தில் கறுப்புக்கொடி ஏற்றி வைத்து மன்னார் நகரசபைத்தலைவர் அழைப்பு

"இந்த நாட்டின் சிறுபான்மையினரை அடிமைப் படுத்தச் சிங்கள சாகியத்தாருக்கு அதிகாரம் கிடைத்த 10-வது தினமான இன்று எமக்கு எக்காரணம் கொண்டும் கொண்டாடி மகிழக் கூடிய நன்னாளாய் இருக்க முடியாது. சகல துறைகளிலும் உரிமை இழந்து துன்பப்பட்டு இருக்கும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கு இன்றைய தினம் ஓர் துக்க தினமாகும். இதற்கு அறிகுறியாக எங்கள் நகரசபையின் தீர்மானப்படி இக்கறுப்புக் கொடியை இங்கு ஏற்றி வைக்கிறேன் தமிழ் பேசும் மக்களின் ஜீவமரணப் போராட்டத்தில் தமிழர்கள் முஸ்லிம்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வெற்றி கிட்டும்வரை உறுதியோடு போராட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்"

மேற்கண்டவாறு கடந்த 4-ந் திகதி காலையில் மன்னார் நகரசபை முன்றலில், அந்நாளைத் துக்கதினமாக அனுஷ்டிக்கும் அறிகுறியாகக் கறுப்புக் கொடியேற்றி வைத்துப் பேசும்போது நகரசபைத் தலைவர் திரு. அபுல் காசிம் மரைக்கார் ஜே பி. கூறினார்.

மன்னார் மக்கள் 4-ந் திகதியை பூரண துக்க தினமாக அனுஷ்டித்தார்கள் தொண்டர்களின் பெரு முயற்சியால் மன்னார்ப்பகுதி எம். பி. திரு அழகக்கோன் அவர்கள் தலைமையில் பிரமாண்டமான ஊர்வலமொன்று அன்று மாலை நடத்தப்பட்டது இதைத் தொடர்ந்து திரு அழகக்கோன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

பிரஸ்தாப கூட்டத்தில் திருவாளர்கள் மஹூர் மௌலானா செல்வநாயகம், டானியல் ரேமண்ட், ஈ. எம் வி நாகநாதன், சங்கர் சின்னையா, முகமது காசிம் காபா பிச்சை தேவர ஜா உட்படப் பலர் பேசினார்கள்.

## எதிரியின் படை...


(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பல ஆண்டுகளாக தமிழினத்தின் நலனுக்காகத் தங்களறிவையின்ப கனவுகளையும் (பதவிப்) பதவிகளையும் துறந்து எல்லாவித கஷ்டங்களை அனுபவித்துத் தமிழ்நாடு முழுவதும் பரந்து சாதி சமய பேதமின்றி ஏராளமான அங்கத்தவர்களையுங்கொண்டு தமிழின விழிப்பை இவ்வளவுக்காவது ஏற்படுத்தக் காரணமாயிருந்த தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்துவதொன்றே இன்றைய தமிழினத்தின் கடமையாகும்.

உளத்தூய்மையுடன் ஒன்று சேருவோம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே.


மிகச்சிறந்தசைக்கிள்மீது
உல்லாசச் சவாரி
செய்யுங்கள்



சவாரி செய்க NEW HUDSON

★ அதிக வசதிக்காக நீளமான பிரேம்.
★ முழு நீள செயின் காப்.
★ துருப்பிடிக்காத ஸ்போக்ஸ்
★ கனமான வெள்ளி பூசப்பட்ட பாகங்கள் கறுப்பிலோ வேறு நிற எனமலோ பூசப்பட்ட பாகங்கள்

★ நியு ஹட்சன் பைசிக்கிள்களிலுள்ள இந்த கம்பீரமான தொழில் நுணுக்க வளர்ச்சிகளையும், மற்றும் போற்றற்குரிய அம்சங்களையும் அனுபவிக்க தவறாதீர்கள். ஒரு பைசிக்கிள் உங்கள் வாழ்நாள் பூராவும் பாவிக்கலாம்.

ஹ்யூவிள் பிரவுண் அன்கோ. லிமிட்.,
மக்கலம் ரோட், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் கடையடைப்பு, கடை திறப்பு சம்பவம்:

# ஜீ. ஜீ. யின் சட்ட மறுப்புப் பித்தலாட்டம்

## அவர்வாயாலேயே அம்பலமாயிற்று

## காலிகள் பெண்களைத் தூஷிப்பது கண்டு பொது மக்கள் பொங்கினர்

### பொலீஸ் குண்டாந்தடிப் பிரயோகமும் "தமிழ் தலைவர்" ஓட்டமும்

(சுதந்திரன் விசேஷ நிருபர்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

தமிழ்க் காங்கிரஸின் மாபெருந் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள திரு ஏ. எஸ். சங்கரப்பிள்ளையின் கடையின் முன்னால் தமது இரண்டொரு டஜன் பரிவாரங்களுடன் நின்றுகொண்டிருந்தார் அதிகாலையிலே அவர் அங்கு போய்ச் சேர்ந்து இடம் பிடித்துக் கொண்டார்

ஒருபக்கத்தில் இரண்டு கட்டம் மேளகாரர்கள் தவில் நாதசுரம், ஊமைக் குழல், சல்லாரி சகிதம் காத்துக்கொண்டு நின்றார்கள். புகைப்படக்காரர் இருவர் கடைவாயிலைப் "போகஸ்" செய்துகொண்டு தயாராக நின்றார்கள். நாலைந்து பேர் வாழைத் தடலுடன் மறைத்துக் கட்டிய மலர் மாலைகளைச் சுழக்கத்தில் வைத்துக்கொண்டு காவல் நின்றார்கள் இவ்வளவு முன்னேற்பாடுகளையும் செய்துகொண்டுதான் "தமிழ்த் தலைவர்" ஜீ ஜீ, சங்கரப்பிள்ளையின் படிக்கட்டில் ஏறிநின்று சிகரட்டுக்குப் பின்னால் சிகரட் புகைத்துக் கொண்டிருந்தார்

சக்கரம் சுழன்றது!

பாவம், அவருடைய மனோரதம், — திரு சங்கரப்பிள்ளை நிச்சயம் வருவார் கடையைத் திறப்பார். அந்த நேரத்தில் 'தமிழ்த் தலைவர்' அங்கு குதித்து கடைவாயிலில் கம்பீரமாக நிற்பார். கடகடவென்று மேளம் முழங்கும், மாலைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கழுத்தில் விழும், புகைப்படக்காரர்கள் "கிளிக் கிளிக்" என்பார்கள். எந்தப் பத்திரிகை ஆசிரியர் போட்டாலும் போடாவிட்டாலும் 'தினகரன்' ஆசிரியர் அந்தப் படத்திலொன்றை மூன்று கலம் பிடித்துப் போட்டு 'யாழ்ப்பாணத்தில் கடைகள் திறந்தன. தமிழ்த் தலைவர் ஜீ ஜீ யின் கோரிக்கைக்கு அமோக ஆதரவு.

சமஷ்டிக்காதிகள் தலைகுனிந்தனர்" என்று எட்டுக்கலம் 'பனர்' தலைப்புகள் போட்டு ஜமாய்த்து விடுவார். அதை வைத்துக்கொண்டு அகில இலங்கையிலும் வாழும் தமிழ்பேசும் மக்களை மயக்கி விடலாம் — இப்படி வான வீதியில் ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் இந்த மனோரதம் ஒரு நொடிப்பொழுதில் சக்கரம் சுழன்று லொடலொடத்துப் போய்விட்டது. திருவாளர் சங்கரப்பிள்ளை, ஊர்காவற்றுறை பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தப் பக்கமே திரும்பவில்லை. அதனால் கடையும் திறபடவில்லை!

அந்த இடத்திற்குத் தமிழரசுத் தொண்டர்களும், அகில இலங்கைத் தமிழ்பேசும் வாலிபர் முன்னணியினரும் ஊர்வலமாக வந்து சேர்ந்தார்கள் என்பதைக் கடந்த வாரமே எழுதியிருந்தோம். பெண் தொண்டர்களும் வந்து "தமிழ்த் தலைவரை" முற்றுகையிட்டுக் கொண்டார்கள். பொலீஸ் தலைவர் திரு ஜெபநேசனும் தமது பொலீஸ் படையுடன் அங்கு வந்து சேர்ந்து விட்டார். பொது மக்கள் கூட்டமும் நிமிஷத்திற்கு நிமிஷம் பெருகிக் கொண்டே வந்தது

தகாத வார்த்தைகள்

தமிழ் காங்கிரஸ் காலிகள் பெண் தொண்டர்களைக் கேவலமாக கேலி செய்ய ஆரம்பித்தார்கள். தேசத்திற்காக, நாட்டிற்காக, மொழிக்காக, இனத்திற்காகத் தொண்டு புரியத் திரண்ட வீராங்கனைகள் அந்தப் பெண்மணிகள். எல்லோரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மாதர் திலகங்கள், மாணவிகள் மறக்குலத் தமிழணங்குகள் அவர்கள். அவர்களைப் பார்த்து தாய்க்குலத்தை அவமதிப்பது போலவும், தமிழ்ப் பெண் குலத்தை இழிவு செய்வது போலவும் கூசவாத வார்த்தைகளை அள்ளிக் கொட்டினார்கள் குடிபோதையில் நிலை கெட்டு நின்ற சில குண்டர்கள். சகோதரிகளே இல்லாத கருகணுளர்கள் போன்ற அவர்கள் தகாத மொழிகளைப் பிரயோகித்தார்கள். 'திருவிழாவிற்கு சின்ன மேளம் வந்திருக்கிறது" என்றார்கள் "ஏன், இவர்களுக்கு வீட்டில் ஆண்கள் இல்லையோ?" என்றார்கள் "ஜிலிப்பிள்ளைகளை வளர்த்து பூங்கத்தப் பவியாக அனுப்பியிருக்கிறார்கள் இந்த தமிழரசுக் கட்சியார்" என்றார்கள். இன்னும் சொல்லத் தகாத, எழுதத் தகாத சொற் பிரயோகங்களையும் வாரிக் கொட்டினார்கள், இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த திருவாளர் பொது ஜனத்திற்கு தமிழ் காங்கிரஸ் தான்தோன்றிகளின் மீதும் அவர் தம் தலைவர் மீதும் ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. அவர்கள் ஆக்ரோஷம் அடைந்தவர்களாக "பொன்னு போ, துரோகி போ, காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியனே, போய்த் தொலை" என்று கோஷமிட்டார்கள்.

திரு பொன்னம்பலம் இப்படி ஆர்ப்பாட்டம் செய்தவர்களைப் பார்த்து முகத்தைப் பல கோணங்களிலும் நெளித்துக்கொண்டு, சிகரட்டைப் புகைத்தார். இடையிடையே தமது தடித்த உதடுகளை நீக்கிப் புன்முறுவல் பூக்க முயன்றார். "சிரித்து மயக்காதே. உன் வசியப் பொட்டுக்கு மயங்கிய காலம் மலையேறி விட்டது" என்று ஒருவர் கூச்சலிட்டார். (திரு பொன்னம்பலம் நெற்றியில் பொட்டிட்டிருந்தார். அது வசியக் கலைப் பொட்டு என்று மக்கள் நினைத்தார்கள்.)

பொன்னு! போய்விடு

கூட்டம் கட்டுக் கடங்காமல் போயிற்று கலவரம் ஏற்படக் கூடிய நிலை உருவாயிற்று. உடனே பொலீஸ் தலைவர் திரு ஜெபநேசன் அங்கு குறுக்கிட்டு கூட்டத்தைக் கலைந்து போகும்படி கட்டளையிட்டார். பொன்னம்பலம் போகாமல் தாங்கள் போக முடியாதென்று கூட்டத்தினர் கூறிவிட்டனர். கூச்சலும் கலவரமும் அதிகமாயிற்று. அந்த சமயம் டாக்டர் நாகநாதன் திரு பொன்னம்பலம் நின்ற இடத்திற்கு முன்னால் எதிரும் புதிருமாக நின்று கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றார். மக்கள் கூட்டம் பொன்னம்பலத்தின் மீதும் அவர் ஆதரவாளர் மீதும் சாடுவதற்கு எத்தனித்தது கூட்டம் நாகநாதனின் கட்டுப்பாட்டையும் மீறிவிடும்போல் இருந்தது. எனவே டாக்டர் நாகநாதன் திரு பொன்னம்பலத்தைப் பார்த்து: "பொன்னு, இந்தக் கூட்டத்தில் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது பேசாமல் கலைந்து போய் விடுவதுதான் புத்தி. நீங்கள் போனால் நாங்களும் போய் விடுவோம். வீண் குழப்பத்திற்கும் கலவரத்திற்கும் ஏன் இடங்கொடுப்பான்? போய்விடுங்கள்" என்றார்.

அதற்குத் திரு பொன்னம்பலம் 'முடியாது, முடியாது. நாங்கள் போகப் போவதில்லை, இங்கு நின்று நாங்கள் கடைகளைத் திறக்க வைக்கிறோமா இல்லையா என்று பாருங்கள். இந்தக் கூட்டம் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. வெற்றியுடன்தான் நாங்கள் திரும்புவோம். அதுவரை அசையமாட்டோம்' என்றார்.

சற்று நேரத்திற்கெல்லாம் பொலீஸ் தலைவர் ஜெப

(8-ம் பக்கம் பார்க்க)




மேலே கொழும்புப் பதிப்பு

கீழே வெளியூர்ப் பதிப்பு

## இங்கு ஒன்று அங்கு ஒன்று!

தமிழ் பேசும் மக்களுக்குரிய செய்திகளை வெளியிடுவதில் சிங்கள ஸ்தாபனத்தாரால் பிரசுரிக்கப்படும் 'தினகரன்' பத்திரிகை கையாளும் தந்திரமாற்று வேலைகளை ஏற்கனவே பல தடவைகளில் படங்கள் சகிதம் அம்பலப்படுத்தியுள்ளோம்

ஒரே திகதியிலுள்ள பத்திரிகையில் ஒரு செய்தியை கொழும்புப் பதிப்பில் ஒரு விதமாகவும், வெளியூர்ப் பதிப்பில் இன்னொரு விதமாகவும் வெளியிட்டு தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிவருகிறது தினகரன், காரணம் இல்லாமல் இக்காரியம் செய்யப்படவில்லை என்ன காரணம் என்பதை நாம் விளக்கவேண்டியதுமில்லை

கடந்த 4-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடையடைப்பு கடைதிறப்பு நிகழ்ச்சிகளை இப்பத்திரிகை எப்படித் தனது கொழும்புப் பதிப்பிலும், வெளியூர்ப் பதிப்பிலும் வெளியிட்டது என்பதை இங்கு தருகிறோம்.

தினகரன் தனது 5-ந்திகதி செவ்வாய்க்கிழமை இதழின் கொழும்புப் பதிப்பில் முதல் பக்க முதல் செய்தியாக:

"திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை ஆதரித்து ஒரே ஒரு கடைதான திறந்திருந்தது. எனவே — யாழ்ப்பாணத்தில் 'கடையடைப்பு"க் கட்சிக்குப் பூரண வெற்றி

கைகலப்பிற்குப் பின் தமிழ்க் காங்கிரஸ் கோஷ்டி ஸ்தலத்திலிருந்து வெளியேறியது"

என்ற தலைப்புகளுடன் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களை வெளியிட்டிருந்தது.

இதே தலைப்புகளைத்தான் "ஸிலோன் டெய்லி நியூஸ்" பத்திரிகை தன் கொழும்புப் பதிப்பிலும், வெளியூர்ப் பதிப்பிலும் எதுவித மாற்றமுமின்றி வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் 'தினகரன்' மட்டக்களப்பிற்கும் மலைநாட்டுப் பிரதேசங்களுக்கும், வடபகுதியின் சில பகுதிகளுக்கும் அனுப்பிய தன் வெளியூர்ப் பதிப்பில் "குல்மால்" வேலை செய்து தலைப்புகளைத் திரித்து "தமிழ்த் தலைவரின்" மானத்தைக் காப்பாற்ற பிரமப் பிரயத்தனப்பட்டுவிட்டது.

பிரஸ்தாப செய்திக்கு வெளியூர்ப் பதிப்பில் கொடுக்கப்பட்ட தலைப்புகள் பின்வருமாறு:

"யாழ் நகரில் 'கடையடைப்பு' 'கடைதிறப்பு' போட்டாபோட்டி.

திரண்டிருந்த ஜனக் கூட்டத்திற்கு கலைந்து செல்லும்படி பொலீசார் வேண்டுகோள்.

யார் முந்திக் கலைவது என இரு கட்சியினர் ஆழ்ந்த சிந்தனை.

பொலிசாரின் குண்டாந் தடிப் பிரயோகம்.

வெளியூர்ப் பதிப்பில் தலைப்பின் வேகம் வெகுவாகக் குறைக்கப்பட்டது ஒருபுறமிருக்க, பிரசுரிக்கப்பட்ட செய்திக்கும் தலைப்புகளுக்கும் எதுவித சம்பந்தமும் அங்கு காணப்படவில்லை. 'போட்டாபோட்டி' நடந்ததாகவோ 'யார் முந்திக் கலைவது என இரு கட்சியினரும் ஆழ்ந்த யோசனை செய்ததாகவோ செய்தியில் விவரம் காணப்படவில்லை. செய்தியில் இல்லாத விவரங்களுக்கு எப்படி ஆசிரியர் தலைப்புக் கொடுத்தாரோ [illegible] விட்டுவைக்கிறோம்.

முள்ளுக்கம்பி முள்ளுக்கம்பி
ஏராளமாக  வந்திருக்கிறது

உங்கள் பயிர்களை மிருகங்கள் மேய்கின்றனவென்று இன்மேல் துக்கம் வேண்டாம்

பயிர்களை மிருகங்கள் மேயாவண்ணம் பாதுகாப்பதற்கு வேண்டிய முள்ளுக் கம்பி எங்களிடம் ஏராளமாக இருக்கின்றன

12 1/2 கேஜ் 450 யார்
14 " 750 "

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிட்டெட்,

371, பழைய சோனக தெரு,
தபால் பெட்டி நீர் 46, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் முஸ்லிம் தொகுதியைச் சிங்கள மயமாக்கும் சதித் திட்டம் செல்லுபடியாகாது!

—————:0:—————

## விழிப்படைந்துள்ள மக்களிடம் விஷமப் பிரசாரம் செய்து பயனில்லை

—————:0:—————

## பதவிஉயர்வுக்காக இனப்பகைவளர்க்கும் ஈனச்செயலில் ஆசிரியர்கள்

இலங்கை சுதந்திரம் பெற்று முதலாவது பொதுத் தேர்தல் நடக்கையில் மூதூர்த் தொகுதி முழுக்க முழுக்க ஓர் முஸ்லிம் தொகுதி. இன்றைக்கு மூதூர்த் தொகுதியில் முஸ்லிம் அல்லாதாரே பெரும்பான்மையினர் என்பதை மிக மிக வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன் நான் மட்டுமல்ல, சென்ற வருடம் சர் ராஸிக் பரீத் மூதூர் சோனக சங்க வருடாந்த கூட்டத்திற் பேசும் போது கூட குடியேற்றத் திட்டங்களை யிட்டுக் கவலை தெரிவித்தார். என்னும் சோனகர், தமிழர் என்ற பேதம் எழுப்பப்படாமல் இருப்பின் இன்னமும் இந்தத் தொகுதியில் தமிழ்ப் பேசும் மக்களே பெரும்பான்மையினராக இருக்கின்றனர் என்பதையிட்டு நாம் ஆறுதலடையலாம்.

### துக்கதினம்

ஆனால் இதையும் சில விஷமிகள், கெடுத்துவிடுவார்கள், கெடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள் என்ற மனக்குறைதான் எம்மை இக் கடிதத்தை எழுதும்படி தூண்டிற்று. இந்தத் தொகுதி மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் எமக்கும் சம பங்குண்டு என்ற உரிமையோடும், இந்தத் தொகுதியில் பரம்பரையினராகப் பெரும்பான்மையினராக வாழும் முஸ்லிம் சமுதாயத்தோடு சகலத்திலும் ஒத்துழைக்கத் தயங்காதவர் என்ற பெருமையோடும் இதை எழுதுகிறேன்.

சென்ற வருடம் சுதந்திர தினத்தை இந்தத் தொகுதியிலுள்ள முஸ்லிம்களும் தமிழர்களுமாகச் சேர்ந்து துக்கதினமாக அனுஷ்டித்தார்கள்,

### முஸ்லிம் ஆசிரியர் கொண்டாடினர்

இந்த வருடமும் மூதூர்க் கிராமத்திலே ஜனாப் மன்சூர் மவ்லானா தலைமையில் உணர்ச்சி மிக்க முஸ்லிம்களும் தமிழர்களுமாகச் சேர்ந்து துக்கதினமாக அனுஷ்டித்தோம்.

இத் தொகுதியின் மிகப் பெரிய கிராமமும், இத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தினரின் பிறப்பிடமுமாகிய கிண்ணியாவிற் சுதந்திர தினம் கொண்டாடப்படவில்லை. ஆனால் பலமான எதிர்ப்பாகவும் இல்லை.

சில முஸ்லிம்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள். அப்படிக் கொண்டாடியவர்கள் இத் தொகுதிக்கு அறிவு விளக்கத்தைக் கொடுக்க வந்த ஆசிரியர்கள்!

இந்த ஆசிரியர்கள் சிலரோடு நான் தர்க்கித்த போது அவர்கள் தர்க்கம் ஓரளவு வகுப்புவாத அடிப்படையிலும், ஒன்றுமறியாத பாமர மக்கட்குப் பிழையான போதனைகளைக் கொடுப்பதாகவும் இருந்தது என என் மனதிற் பட்டது. இந்த வகுப்புவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து இத் தொகுதியைச் சிங்களத் தொகுதியாகாமற் காப்பாற்றுவதும் எம் தொகுதி மக்கட்கு உண்மைகளைத் தெரிவிப்பதும் என் கடமை.

சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும் என்றவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்கள் இவை,

1. தமிழர்கள் தங்களின் நலனுக்காகத்தான் முஸ்லிம்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். இலங்கையிற் தங்களை ஸ்தாபித்துக் கொள்ளவே முஸ்லிம்களையும் அணைத்துக் கொள்கிறார்கள். சேர். பொன்னம்பலம் இராமநாதனும் இதைத்தான் செய்தார்.

2. தமிழர்கள் யாழ்ப்பாணத்தார்களைப் பின்பற்றுகிறார்கள்.

3. தமிழர்கள் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட ஜனாப் ஜின்னாவை எந்தக் கூட்டத்திலாவது புகழ்ந்தார்களா? மகாத்மா காந்தியைத்தான் புகழ்கிறார்கள் ஏனென்றால் அவர் ஒரு தமிழர்!

வ. அ. இராசரத்தினம்

### சர். இராமநாதன் துரோகம் செய்தாரா?

இந்தக் கூற்றுக்களை ஆராய்ந்து பார்ப்போம் 14-ம் ஆண்டுச் சிங்கள முஸ்லிம் கலகத்திற் பொன்னம்பலம் இராமநாதன் சிங்களவர்கட்காகப் பேசியதையிட்டுத்தான் என் முஸ்லிம் நண்பர்கள் 'தமிழர்கள் முஸ்லிம்களின் விரோதி' என்கிறார்கள்.

இதற்கு அந்தக் காலத்துச் சரித்திரத்தை ஆராய வேண்டும். சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கலகம் நடந்தது. தணிந்தது. அப்போதிருந்த ஆங்கில அரசாங்கம் சில குறிப்பிட்ட சிங்களத் தலைவர்களை அநியாயமாகத் தண்டிக்க முயல்கையிற் தேசிய ஒற்றுமைக்காக அரசாங்கத்தை எதிர்த்தார் சர். இராமநாதன். இதில் என்ன வகுப்புவாதம் இருக்கிறது? முஸ்லிம் தலைவர்களையும் ஆங்கில அரசாங்கம் அநியாயமாகத் தண்டிக்க முயன்றால் சர். இராமநாதன் அவர்கள் கட்சியையும் பேசியேயிருப்பார். இந்த உண்மையை விளங்காமல் அல்லது விளங்கிக்கொண்டேவேண்டுமென்றே கயிறு திரிக்கிறார்கள். அப்படித் திரிப்பவர்களிடம் கேட்கிறேன். தர்போதய தஹநாயகா, மேத்தானந்தாக்களைப்போலச் சேர். இராமநாதன் எந்தக்காலத்திலாவது ஓர் சமுதாயத்தின் மேல் இன்னொரு சமுதாயத்தை ஏவிவிட்டு வகுப்புவாதத்தைத் தூண்டினார் என்று எந்தச் சரித்திர ஆசிரியனாவது நெஞ்சிலே கை வைத்துச் சொல்ல முடியுமா?

### தமிழுணர்ச்சி யாவருக்கும் உண்டு

இரண்டாவதாக இத் தொகுதித்தமிழர்கள் யாழ்ப்பாணத்தவர்களைப் பின்பற்றுகிறார்கள் என்ற வாதமும் முழுக்க முழுக்க வேண்டுமென்றே சொல்லப்படுவதொன்றுதான்.

சோல்பரி அரசியற் திட்டத்தின் பின்னால் இங்கே மூன்று தேர்தல்கள் நடந்திருக்கின்றன. இந்தத் தேர்தல் எதிலாவது மூதூர்த் தொகுதித் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தவர்கள் சொல்லைக் கேட்டார்களா? யாழ்ப்பாணத்தவர்களுக்கு வாக்களித்தார்களா?

இன்றைய மொழிப் பிரச்னையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், புத்தளம், என்று தமிழ் பேசும் மக்கள் அதிகமாக உள்ள எல்லா இடங்களிலும் எல்லாத் தமிழர்களுமே அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள். மூதூர்த் தொகுதி மக்களும் எதிர்க்கிறார்கள் என்றால், அந்த எதிர்ப்பு இயற்கையானதொன்று. நாங்கள் எதிர்கிறோம் என்றால் அதன் உண்மையான காரணம் நாங்கள் மரங்களாகவோ மட்டைகளாகவோ பிறக்காமல் இரத்தமும் சதையும், உள்ளமும் உணர்ச்சியும் கொண்ட மனிதர்களாகப் பிறந்ததுதான். செல்வநாயகத்திற்கும் வன்னியசிங்கத்திற்கும் உள்ள தமிழ்ப்பற்று மூதூர்த்

(12-ம் பக்கம் பார்க்க)

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

சிறந்த அழகு ★ சிரிய வேலைப்பாடு

இலங்கையின் மிக மிகப் பெரிய நகை வியாபாரிகள்

போன்: 161.



தந்தி: "ஜுவல்லர்ஸ்"

உயரிய கலைத்திறன் ★ உத்தரவாதம்

யாவும் அமைந்த தங்க நகைகளுக்கு

யாழ்ப்பாணம்

தங்க மாளிகை

# இந்திய மூவர்ணக் கொடி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாரை இந்தியாவிற்குள் வரக்கூடாதெனத் தடைவிதித்தது. இதற்குப் பதிலிறுக்கும் முறையாக ஜெனிவாவிலிருந்து "வந்தே மாதரம்" எனும் பத்திரிகையை வெளியிட்டு, ஆளும்வர்க்கத்திற்கு ஆணித்தரமான பதிலளித்தார். இதுபோன்ற பத்திரிகை சர்க்காருக்கு எதிராக முன்பு வெளிவந்ததே கிடையாது.

### ருஷிய உதவி

அம்மையாரின் புரட்சிகரமான கொள்கைகளும் சுதந்திர தாபமும் ஐரோப்பா முழுதும் பரவியது. கண்டத்தின் ஏனைய பாகங்களிலிருந்தும் புரட்சிவாதிகள் அவரிடம்வந்து அவரின் புத்திமதிகளையும் ஆசியையும் கேட்டனர். இந்தியாவின் பெயர்பெற்ற புரட்சிவாதிகளான வீர சவர்க்கர்,ஹார் தயால், கிருஷ்ண வர்மா, விரேந்திரநாத் சட்டோபாத்தியாயா எம். பி. டி. ஆச்சாரியா போன்ற மற்றும் பலர் அம்மையாரின் கொள்கைகளுக்குக் கீழ் ஒன்று திரண்டனர்.

தங்களுக்கு எதிர்ப்புவளர்வதைக்கண்ட பிரிட்டிஷ் சர்க்கார் அவரை உடனடியாக நாடுகடத்தும்படி பிரான்ஸை வற்புறுத்தியது. இதற்குப் பதிலாக, இந்திய சகாக்களுக்கு வெடிகுண்டுகள் செய்யும் முறையைச் சொல்லிக்கொடுக்கும்படி ருஷ்ய புரட்சிவாதிகளை வேண்டிக்கொண்டார்.

### பலாத்காரமும் தண்டனையும்

இந்திய இளைஞர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக வெளியரங்கமாகப் புரட்சி செய்ய வேண்டுமென்ற அழைப்பு, கிருஷ்ண வர்மனின் "இந்தியன் [illegible] (Sociologist) என்னும் பத்திரிகையில் ஓர் பகிரங்கக் கடிதமாகப் பிரசுரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தியா முழுதும் வெடிகுண்டு வீசுதல் நடைபெற்றது இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர்களை தூக்கில் இடுவதினால் இதை ஆளும்வர்க்கத்தினர் நசுக்கினர். முதன்முதல் தூக்கிலிடப்பட்டவர் குடிராம் போஷ்.

### மூவர்ணக்கொடி

சுதந்திர-அஹிம்சா-இந்தியா அம்மையாரின் புரட்சிகரமான நடவடிக்கைகளுக்காக அவரை மறக்கலாம், ஆனால் முதலாவது தேசியக் கொடியை அருளியதற்காக அவரை என்றும் மறக்கமுடியாது.

1908-ம் வருடம் ஜெர்மெனியிலுள்ள ஸ்டட்கார்ட் (Stutigart) எனும் இடத்தில் கூடிய சர்வதேசிய சமதர்ம மகாநாட்டில் (International socialist conference) பங்குபற்றும்படி காமா அம்மையாரை புகழ்பெற்ற ஜீன் ஜோரஸ் (Jean jaures) எனும் பிரான்ஸிய சோஷலிஸ்ட் தலைவர் அழைத்திருந்தார். அங்கு இவரை இந்தியாவின் Fraternal நட்புரிமைப் பிரதிநிதியென அறிமுகஞ் செய்துவைத்தார். அறிமுகத்திற்கு பங்கம் விளையாது, இந்தியாவில் பிரிட்டிஷாரின் அடக்குமுறை, தவறுதலான ஆட்சியைப்பற்றி மிகவும் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். இவரின் பேச்சு வன்மை மகாநாட்டில் யாவரையும் கவர்ந்தது.

பேசிக் கொண்டிருந்தவர், சடுதியாகத் தனது சேலை மடிப்பிலிருந்து ஒரு பொட்டணத்தை வெளியெடுத்து விரித்தார். அதுதான் இந்தியாவின் மூவர்ணத் தேசியக் கொடி. அங்கு கூடியிருந்த உலக சோஷலிசத் தலைவர்கள் யாவரும் ஆரவாரம் செய்து வரவேற்றனர். இது 1908-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி நடந்தது சுதந்திரத்தாபமுள்ள ஏனையோரையும் ஒன்று கூட்டி இக்கொடிக்குக்கீழ் போராடச்செய்து "கடவுளுக்கு அடிபணிந்து ஆக்கிரமிப்பை நிறுத்துவோம்" என காமா அம்மையார் முழங்கினார்.

### பயமற்ற காமா-பிரிவு

முதலாவது மகாயுத்தம் ஆரம்பமானபோது பிரிட்டிஷாரின் வேண்டுகோளின் பிரகாரம் பாரிசுக்கு வெளியேயுள்ள ஓர் பழைய கோட்டையில் சிறையிடப்பட்டு கஷ்டப்பட்டார். சமாதான உடன் படிக்கையானவுடன் சிறையிலிருந்த அம்மையார், திரும்பவும் புத்துணர்ச்சியுடன் பிரிட்டிஷாரைத்தாக்க ஆரம்பித்தார்.

முப்பத்தைந்து வருடங்களாக நாடு கடத்தப்பட்டிருந்து அம்மையார் தனது முதுமை வயதில், தாய்நாடுதிரும்ப விரும்பினார். ஆனால் அங்கு அரசியலில் பங்குபற்றமாட்டேனென ஒரு எழுத்து-உறுதி-பாடு தந்தாலொழிய, இந்தியாவிற்குள் நுழைய விடோமென பிரிட்டிஷ் சர்வாதிகாரிகள் வற்புறுத்தினர் ஆனால் அவர் அங்கு வாழவரவில்லை, மாழவே வந்தார். பி. டி. பார்சி ஜெனரல் ஹொஸ்பிட்டலில் எட்டு மாதகாலமாக சிகிச்சை செய்து, திடீரென 1936ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 16 திகதி மரணம்வாழ்க்கையை வெற்றிகொண்டது, இந்த தைரிய புரட்சிவாதப் பெண் யாரும் அழாமல், கௌரவிக்காமல் இவர் புகழைப் பாடாமல் மறைந்தார்.

சுதந்திர இந்தியா இப்படியான ஒரு பயமற்ற ஆத்மாவை மறக்க முடியுமா?

மூலம்: நிலூபர் மர்வானு
தமிழாக்கம்: சித்தி மரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தையும் சலனத்தையும் கட்டுப்படுத்தும் இசை

## தெய்வப் பொலிவுடைய கலை

### இதைக் காக்கும் கலைஞனை நாடு கொண்டாடவேண்டும்

சீர்காழி—கோவிந்தராஜன்

இசையில் எவனுக்கு நாட்டமில்லையோ அவன் கொலைபாதகத்திற்குக்கூட அஞ்சமாட்டான் என்பது முதியோர் மொழி. செவிக்கு உணர்வில்லாத நேரத்தில் வயிற்றிற்குக் கொஞ்சம் கொடுக்கலாம் என்பது வள்ளுவர் வாக்கு. ஆக, இசையானது நம் வாழ்க்கையின் அத்தியாவசியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மகிழ்ச்சி தோன்றுகிறது. துன்பம் நம்மைச் சூழ்ந்து, வறுமை பீடித்து வேதனைப்படுகின்ற நேரங்களிற்கூட எங்கேனும் நல்ல கானம் கேட்டால் சற்று அதில் லயித்து மெய் மறந்து இருக்க நேரிடுகிறது. இசையில் கட்டுப்பட்டதே இந்த உலகமும் அதன் சலனமும்.

#### இசையின் தொன்மை

இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நேரத்தில் தானோ என்னவோ, நம் முன்னோர்கள் எழுதிய புராணங்களில் ஒவ்வொரு கடவுளையும் இசையோடு சம்பந்தப்படுத்தியே எழுதிவைத்திருக்கிறார்கள். கண்ண பரமாத்மாவின் வேணுகானம் இந்த அகிலத்தை எல்லாம் ஆட்கொண்டதென்பார். கலை அரசி சரஸ்வதி தேவியின் வீணைநாதம் கேட்டோரெல்லாம் மயங்கும் அளவில் இருந்ததாம். அதேபோல நாரதர் இசை அரசன், எனவும் நந்திதேவர் தாளவாத்தியத்தில் சிறந்தவர் எனவும் பரமசிவன் உடுக்கைப் பிரியன் எனவும் இன்னும் பலவாறு இசையோடு சம்பந்தப்படுத்தி எழுதியுள்ளார்கள். இதிலிருக்கும் உண்மை யென்னவெனில் உலகம் உதித்தநாள் முதல் இசையும் உதித்து வளர்ந்து வருகிறது என்பது புலனாகிறது.

இசைக்கலையை நம் முன்னோர்கள் மிகவும் போற்றி வளர்த்திருக்கிறார்கள். இசைக்கலைஞர்களுக்கு மிகவும் மரியாதைகள் நடந்திருக்கின்றன. நம் நாட்டை ஆண்ட மன்னர்களும் சிற்றரசர்களும், தங்களுடைய சபையில் நிறைய இசைக்கலைஞர்களை வைத்துப் பாராட்டி பரிசுவழங்கிப் பராமரித்து வந்திருக்கிறார்கள். ஆக மனிதப்பிறவிகளாகிய நம்மிடையே இசை என்ற ஒரு அரும்பெரும் சாதனம் இருந்து வழங்கிவருதல் நாம் செய்த பாக்கியமல்லவா?

#### இசையில் தெய்வீகம்

எனக்கு ஒரு பெரிய ஆசை அதாவது நம் நாட்டில் ஒவ்வொரு பள்ளியிலும் இசைக்கலையைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டுமென்பதே. பாட முடிந்தவர்கள் அதாவது சாரீர வசதியுள்ளவர்கள் தான் பாட இயலும். மற்றவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்பீர்களேயானால் சரி! பாடுபவர்கள் பாடட்டும்; மற்றவர்கள் ஏதாவது இசைக்கருவியைக் கையாளட்டுமே, இதை எதற்காகச் சொல்லுகிறேனென்றால், இந்த இசைக்கலை இருக்கிறதே, அதில் நிச்சயமாக ஒரு தெய்வீகமும் இருக்கிறது. எவன் ஒருவன் இசையில் பிரவேசிக்கிறானோ அவன் தீய எண்ணங்கள் தீய செய்கைகள் இவைகளினின்று விடுபடுகிறான். அவனுக்கு அந்த தாழ்ந்த மனோபாவங்கள் ஏற்படுவதில்லை கடவுளிடம் ஒரு பக்தி, பெரியவர்களிடத்தில் ஒரு மரியாதை மக்களிடத்திலே ஒரு அன்பு. இப்படியாக நல்ல பண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே இசைக்கலை நம் வாரிசுகளுக்குக் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும்.

#### எனது இசை மோகம்

எனக்கு இசையிலே இளமையிலேயே ஒரு மோகம். ஏன்? வெறி என்றுகூடச் சொல்லலாம். அந்த வெறியிலே உந்தித்தள்ளப்பட்டு ஓட ஆரம்பித்தநான் இன்று உங்களிடையே ஒரு பாடகனாக, அதிலும் உங்கள் அன்புக்கு பாத்திரமானவனாக வந்து நிற்கிறேன். ஆக இந்த இசைக்கலை எனக்குத்தேடித் தந்துள்ள பெருமையும் புகழும் நான்செய்த பெரும் பேறு என்றேதான் நினைக்கிறேன். மகிழ்கிறேன்.

என் வரையில் என்வாழ்வு இசை மயமாக விளங்க வேண்டுமென்றே விரும்புகிறேன். எனக்குமட்டும் சக்தியிருந்தால் என்வீட்டுச் சுவரைக்கூடப் பாடும்படி செய்து அனுபவித்துஉங்களை அழைத்துக் காட்டுவேன் அது நம்மால் முடிகிறகாரியமா?

#### கலை மேதை

சமீபத்தில் உயிர் நீத்த மேதை ராஜரத்தினம்பிள்ளை அவர்கள்தான் இறப்பதற்கு முதல்நாள்வரையிற் கூடத் தன் கலைப்பணியைப் பூர்த்திருக்கிறார். அவரின் ஆற்றலைப் பற்றி என்னவென்று சொல்வது? அந்த மேதையைப் பிரிந்த துக்கம் இன்னமும் நம்மைவிட்டு நீங்கவில்லை. கலைக்காக அவர் வாழ்ந்தார் அந்தக்கலை அவரால் மேன்மையுற்றது. கலைஞன் என்றால் அப்படித்தான் வாழ வேண்டும். கலைசிரஞ்சீவியாக

(11-ம் பக்கம் பார்க்க)



## தயாரிப்பில்....

### திருடர்கள் ஜாக்கிரதை

ப்ரதிபா பிக்சர்ஸ்சாரின் பதினாறுவது தயாரிப்பான இப்படத்தில் டி. எஸ். பாலையா, எஸ். எஸ். ராசேந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், வி. கே ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், டி ஆர். ராமச்சந்திரன், "காகா" ராதாகிருஷ்ணன், ஜி. வரலட்சுமி, கிரிஜா, எஸ். கே. வேணுபாய், ஜி. சகுந்தலா மற்றும் பலரும் இதில் நடிக்கின்றனர், இதன் கதை வசனத்தை பி எக்ஸ். ரங்கசாமி பி. ஏயும் பாடல்களை தஞ்சை ராமையாதாசும், இசையமைப்பை கே. வி மகாதேவனும் செய்கின்றனர். டைரக்ஷனை பி. என். ராவ் கவனிக்கிறார்.

### அவன் அமரன்

பீப்பிள்ஸ் பிலிம்ஸ்சாரின் முதல் தயாரிப்பான இப்படத்தில் நடிப்புப் புலவர் கே ஆர் ராமசாமி, டி. எஸ் பாலையா, என். வி. சுப்பையா, ப்ரண்ட் ராமசாமி, பி. கண்ணாம்பா, ராஜசுலோசனா, எம். எஸ் திரௌபதி மற்றும் பலரும் நடிக்கின்றனர். படத் தயாரிப்பாளரான நாகர்கோவில் எஸ். நாகராஜன் பி. ஏ தான் இப்படத்திற்கு கதை வசனம் தீட்டியுள்ளார். இசையமைப்பை இப்ராகிமும் டைரக்ஷனை எஸ். பாலசந்தரும் கவனிக்கின்றனர்

### அலாவுதீன் அற்புத விளக்கு

ஜெய்சக்தி பிக்சர்ஸ்சார் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகும் இப்படத்தில் ஏ. நாகேஸ்வரராவ் அஞ்சலிதேவி, டி எஸ் பாலையா, எஸ். வி. ரங்காராவ். ராஜசுலோசனா, கே. ஏ தங்கவேலு, எஸ். வி. சுப்பையா, வி. கே. ராமசாமி மற்றும் பலரும் இதில் நடிக்கின்றனர். டி. ஆர். ரகுநாத் டைரக்ட் செய்யும் இப்படத்தின் வசனத்தை ஏ. எல் நாராயணனும், இசையமைப்பை எஸ் நாகேஸ்வரராவும் செய்கின்றனர்.

### புதையல்

குமார் பிரதர்ஸ்சார் அதிவிரைவில் வெளியிட இருக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன், பாலையா, சந்திர பாபு, டி. வி. நாராயணசாமி, எம். கே. ராதா, பத்மினி ஆகியோர் நடிக்கின்றனர். இதன் கதை வசனத்தை மு கருணாநிதி எழுதியிருக்கிறார். டைரக்ஷனை கிருஷ்ணன் பஞ்சு செய்கிறார். இசையமைப்பு விசுவநாதன் ராமமூர்த்தியாகும்.

### தங்கையா-தாரமா?

கே. கே. ஆர். புரடக்ஷன்ஸ்சார் தயாரிக்கும் இப்படம் அதிவிரைவில் வெளிவர இருக்கிறது. இப்படத்தில் பி. எஸ் சரோஜா, மனோகர், மாதுரிதேவி, வி கே ராமசாமி, எஸ். வி சுப்பையா, டி. பாலசுப்ரமண்யம், மற்றும் பலர் இதில் நடிக்கின்றனர். படத் தயாரிப்பாளரான கே. கே ரத்தினம் என்பாரே இப்படத்தின் கதை வசனத்தை எழுதியுள்ளார். டைரக்ஷனை பிரபல கேமரா நிபுணரான டி. கோட்னீஸ் ஏற்றிருக்கிறார்.

### வலைவீசி

பிரபல டைரக்டரான ராஜா சந்திர சேகர் (இவர் டி ஆர்.ரகுநாத்தின் தமையனார் ஆவர்) தாம் சொந்தமாக தயாரிக்கும் இப்படம் புராணக் கதையை தழுவியதாக இருக்குமாம். இதில் பிரபல நட்சத்திரங்கள் ஜொலிப்பார்களாம். அவரே டைரக்ட் செய்யும் இப்படத்திற்கான வசனங்களை விந்தன் எழுதி வருகிறார். படப் பிடிப்பு அதி விரைவில் ஆரம்பமாகும்.

### அவள் தான் இவள்

நடிகை மாதுரிதேவி தாம் சொந்தமாக தயாரிக்கும் இக் கதை ஆங்கிலக் கவி சேக்ஸ்பியரின் நாடகம் ஒன்றின் தழுவலாம். இதில் மாதுரிதேவி, நாகையா, சாரங்கபாணி, ஈ. வி. சரோஜா மற்றும் பலரும் நடிக்கின்றனர். இசையமைப்பை எஸ். பாண்டுரங்கம் அமைக்கிறார்.

### பார்த்திபன் கனவு

அமரர் கல்கி தீட்டிய இக் கதையை மர்மவீரன் தயாரித்து வெற்றி கண்ட ஜூபிலி பிக்சர்ஸ்சார் படமாக்கப் போகின்றனர். இதில் வைஜயந்திமாலாவும் ஜெமினி கணேசனும் பிரதம பாகத்தில் நடிக்கின்றனர். யோகானந்த் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கான வசனங்களை விந்தன் எழுதுகிறார்.

### ஜெய வீரன்

ரவி பிலிம்ஸ் என்ற பெயரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக் கம்பெனியின் முதல் தயாரிப்பான இப் படத்தில் எம். கே. ராதா, ரஞ்சன், ஜெமினி கணேசன், என். டி ராம

(11-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. விலிருந்து என்னைப் பிரிக்கவே முடியாது

### பொருளும் புகழும் எனக்குப் பெரிதல்ல கொள்கைக்காகவே நான் வாழ்கிறேன்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் முழக்கம்

"என்னைத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவனாகவே இருந்துதான் நான் என் உயிரை விடுவேன். உலகமே திரண்டு வந்து எதிர்த்தாலும் உறுதி குலையமாட்டேன். பொருள்—புகழ், இவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். லட்சியம் ஒன்றே எனக்குப்பெரிது. கஷ்டங்கள் கோடி கோடி வந்தாலும் அஞ்சேன், என் லட்சியத்தைக் கடைசிவரை கைவிடமாட்டேன். லட்சிய புருஷனாக வாழ்வதிலேயே எனக்கு நிம்மதியும் மனநிறைவும் எல்லையற்ற இன்பமும் கிடைக்கிறது."

இவ்வாறு புரட்சி நடிகர் திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் ஏராளமான நடிகர் நடிகைகள் மற்றும் சினிமா நாடகக் கலைத்துறைப் பிரமுகர்கள் முன்னிலையில் பேசும் போது குறிப்பிட்டார்.

பொங்கல் பெருநாளையடுத்து திரு எம். ஜி இராமச்சந்திரனையும் அவரது சகோதரர் திரு. எம் ஜி சக்ரபாணியையும் அவர்களது கொள்கை உறுதி... கத் தக்க செ... பாராட்டு முகமாகச் சென்னையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசும் போதே திரு இராமச்சந்திரன் மேற்கண்டவாறு சொன்னார்.

கூட்டத்தில் சகோதரர் இருவருக்கும் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது. இதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய திரு. இராமச்சந்திரன் மேலும் சொன்னதாவது:

"நான் திராவிட முன்னேற்... ...துக் காக வாழ்பவன் பணமும் புகழும் போதும் என்ற அளவுக்கு அதிகமாக இருந்தாலும் கூட என்னால் நிம்மதியாக இருக்க முடியாது. லட்சியமற்ற வாழ்க்கை எனக்கு சூன்யமாகவே தெரிகிறது. அதனால்தான் ஒரு லட்சியவாதியாக நான் வாழ ஆசைப்படுகிறேன். திராவிடமுன்னேற்றக்கழகம்என் லட்சிய ஈடேற்றத்துக்கு அனுசரணையாக இருக்கிறது. எனவே என் இறுதி மூச்சு வரை திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவனாகவே இருக்க உறுதிபூண்டு கொண்டேன்"

திரு. இராமச்சந்திரன் பேசும் போது உணர்ச்சி வசப்பட்டு நாக்குழற நெக்குருகிப் பேசினார்.

நடிகமணி டி. வி. நாராயணசாமி திரு எம். ஜி. இராமச்சந்திரனையும் அவரது சகோதரர் சக்கரபாணியையும் பாராட்டிப் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1957 பெப்ரவரி மாதம் 17-ந் திகதி

194 ஏ, தம்பா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# திருமலைத் தியாகிக்கு அஞ்சலி



# எதிர்ப்பின் எதிரொலி!

"அடிக்கு மேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும்" என்பது பழமொழி எதிர்ப்புக்கு மேல் எதிர்ப்புக் காட்டினுல் எந்த அரசாங்கமும் பணியாமல் முடியாது இப்படி ஒரு புதுமொழியைக்கூட நாம் உற்பத்தி செய்துவிடலாம் மொழிப் பிரச்னை சம்பந்தமாக விறைத்த தலையோடு இதுவரை ஆகாயத்தையே பார்த்துக் கொண்டு காரியமாற்றிய இலங்கைப் பிரதமர் திரு சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டாரநாயகா இப்போது சற்று தலையைத் தொங்கப்போட்டுக் கீழேயும் பார்க்க முற்பட்டிருக்கிருர்.

தமிழ் பேசும் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் ஒற்றுமையாக, ஒருமுகமாக சிங்கள 'ஸ்ரீ' சட்ட மறுப்பிலும், சுதந்திர தின ஹர்த்தாலிலும் காட்டிய உறுதியான எதிர்ப்பு அவரைத் தலைவணங்கச் செய்திருக்கிறது. மலை நாட்டுத் தலைவர்களுக்கும், மற்றுமுள்ள தமிழ்த் தலைவர்களுக்கு மிடையே உருவாகிவரும் ஐக்கியம் அவரை நிலை பணியச் செய்திருக்கிறது. "சிங்களம் மட்டும்" அன்றி வேறெதையும் திரும்பியும் பாரேன் என்று கடந்த ஜூன் மாதம் 5-ந் திகதி வெறிபிடித்துக் கர்ஜித்தார் இந்தப் பண்டாரநாயகா. காலிமுகப் புற்றரையில் கொட்டும் மழையில் நனைந்து, குண்டர்களின் தாக்குதலுக்கிலக்காகி, இன்னலுற்ருர்கள் மதிப்புக்குரிய நம் தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும். "நனையட்டும் நனையட்டும், நன்ருக நனையட்டும், மொழிக் கொதிப்பு அடங்கிக் குளிரடையும் மட்டும் நனைந்துகொண்டேயிருக்கட்டும்" என்று குத்தல் மொழி பேசிக் கொக்கரித்தார் இந்தப் பண்டாரநாயகா இப்படிப்பட்டவர்தான் இன்று சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி நிதானமாகப் பேசவும், மொழிப் பிரச்னைக்கு தமிழ்ப் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாடு கூட்டி ஆலோசிக்கவும் முன்வந்திருக்கிருர் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த வாரம் கொழும்பில் பௌத்த பிக்குகளின் ஐக்கிய முன்னணிக் காரியாலயமொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு பண்டாரநாயகா என்ன சொன்னுர் தெரியுமா!

"ஒவ்வொருநாளும் இந்நாடு உள்நாட்டுக் கலகத்தையே நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. மற்ற மனிதனின் அபிப்பிராயத்தையும் மதித்துத் தேவையானவற்றைச் செய்துகொடுக்க நாம் தவறக்கூடாது. மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாக நாம் நடந்து கொள்ளக்கூடாது. நாட்டில் பரிபூரண அமைதியும், சகல மக்களின் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் அரசாங்கம் எந்த அபிவிருத்தியையும் செய்யமுடியாது நாட்டின் மூலவளங்கள் மக்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படவேண்டுமோ அன்றி உள்நாட்டு யுத்தம் செய்வதற்குத்தான் உபயோகப்பட வேண்டுமா?"

இது என்ன அதிசயம்! இது என்ன ஆச்சரியம்! திரு. பண்டாரநாயகாவிற்கு இத்தகைய மனமாற்றம் திடீரென்று எப்படி யேற்பட்டது? தமிழ் பேசும் மக்களின் "ஏகோபித்த எதிர்ப்பு" என்ற அற்புதமான அரசியல் ஆயுதம் கொண்டு தொடுத்த அறப்போரில் கிடைத்த முதல் வெற்றி இது வெனலாம் ஆம், - எதிர்ப்பின் எதிரொலி - "ஸ்ரீ" எதிர்ப்பும், சுதந்திர தின எதிர்ப்பும் கைமேல் காட்டிய பலன் இது வெனலாம்.

ஆயினும் திரு. பண்டாரநாயகாவின் இந்த திடீர் மனமாற்றத்தையும், ஆஷாடபூதித்தனமான அரசியல் வேதாந்த போதனையையும் தமிழ் பேசும் மக்கள் முற்ருக நம்பி ஏமாந்து போகக் கூடாது. இப்படியான போதனைகளை உதட்டளவில் செய்து கொண்டு தான் பழைய யு. என். பி அரசாங்கம் தமிழ் இனத்தின் கழுத்தை நோகாமல் அறுத்து வந்தது என்பதை ஞாபகத்தில் வைத்து, இலட்சியம் கைகூடும் வரை எதிர்ப்பை உக்கிரமாக்கிக் கொண்டு வர வேண்டும்! தளர்ந்து விடக் கூடாது.

கடந்த காலத்தில் — அதாவது யு. என். பி. ஆட்சியிலும் அதிகாரத்திலுமிருந்த காலந் தொட்டு — தமிழ் பேசும் மக்களும், அவர்களைக் காட்டிக் கொடுத்த இனத்துரோகிகளான தலைவர்களும் விட்ட மாபெரும் தவறுகள் தாம் இன்ற தமிழ் பேசும் இனத்தை பரிதாப நிலைக்குள்ளாக்கியிருக்கின்றன மலை நாட்டுத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை வாக்குரிமைச் சட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிடப் பட்ட போதும், தக்க சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்ட போதும், அப்போது பதவிக்காகவும், பட்டத்திற்காகவும் அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் தம்கள் எதிர்ப்பைக் காட்டியிருந்தால் தோலைக் கடித்து துணியைக் கடித்து இன்று ஆளைக் கடிக்கும் நிலை ஒருபோதும் ஏற்பட்டிராது. அப்போதிருந்த ஒத்துழைப்புத் தலைவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழ் பேசும் பொது மக்கள் கண்ணில் மண்ணைத்தூவி வந்தார்கள்

காலங் கடந்தேனும் இப்போது உருவாகியிருக்கும் எதிர்ப்பு மேலும் மேலும் வலுப்பெற்று வருமானுல் திரு பண்டாரநாயகாவின் அரசியல் தேர் சுலபமாக உருள முடியாத கட்டம் வந்தே தீரும். அப்போது தமிழ்ப் பேசும் மக்களுடன் சமரசம் பேசி அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்குவதைத் தவிர வேறுவழி திரு பண்டாரநாயகாவிற்குப் புலப்பட முடியாது அந்த வித்தில் நிலை உருவாவதற்கிடையில் பலவிதமான அற்புதங்களையும், ஆசை வார்த்தைகளையும் அள்ளி வீசி தமிழ் பேசும் மக்களையும் அவர்தம் தலைவர்களையும் [illegible] வலையில் போட்டுக்கொள்ள அரசாங்கத்தினர் சூழ்ச்சி செய்வார்கள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

# ஜீ. ஜீ. யின் சட்ட மறுப்...

நேசன் டாக்டர் நாகநாதனிடம் சென்று மக்களை அழைத்துப் போகும்படிக் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் நாகநாதன்: பொன்னம்பலம் இங்கு நிற்கும் வரை நாங்கள் போகமுடியாது அவரும் போவதானுல் நாங்களும் போகிறேம்.

திரு. ஜெயநேசன்: (பொன்னம்பலத்திடம் சென்று) மிஸ்டர் பொன்னம்பலம். தயவு செய்து இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள். கலவரம் ஏற்படும் போல் இருக்கிறது. கட்டு மீறினுல் நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது.

திரு. ஜீ. ஜீ: நான் போகப் போவதில்லை. இங்கு நிற்க எனக்கு உரிமையுண்டு. இந்த இடத்திற்கு முதலில் வந்தவர்கள் நாங்கள். ஒருபோதும் அசைய மாட்டோம். அவர்களைத் துரத்துங்கள்.

திரு. ஜெயநேசன்: அவர்களை எப்படி முதலில் போகச் சொல்வது? அவர்களுடைய கூட்டம் மிகப் பெரிதாக இருக்கிறது. ஆயிரக்கணக்கில் நிற்கிருர்கள். உங்களில் இருபது முப்பது பேர் தான் நிற்கிறீர்கள். இப்படியான சந்தர்ப்பத்தில் பெரிய கூட்டத்தைக் கலைத்துப் போகச் சொல்வதை விட சிறிய கூட்டத்தைப் போகச் சொல்வதும் கலைத்துவிடுவதும்தான் பொலீசாராகிய நாம் மேற்கொள்ளக் கூடிய காரியமாகும். இதுவே எங்களுக்குச் செய்யக் கூடியதாகவும் இருக்கிறது. எப்படிச் சுலபமான வழியில் சமாதானத்தை நிலை நாட்டலாம் என்பதை ஆராய்ந்து நடவடிக்கையெடுப்பதுதான் எங்கள் வழி. உங்களைத்தான் முதலில் கலைந்து போகும்படி கட்டளையிடுகிறேன்.

திரு. ஜீ. ஜீ: அது ஒருபோதும் நடக்காது.

திரு. ஜெயநேசன்: அப்படியானுல் நாங்கள் குண்டாந்தடிப் பிரயோகந்தான் செய்ய வேண்டி இருக்கும்.

(குண்டாந்தடிப் பிரயோகம் என்றதும் திரு. பொன்னம்பலம் வெல வெலத்து விட்டார். உடனே தமக்குப் பக்கத்தில் நின்ற பரமேஸ்வராகல்லூரி அதிபர் திரு. சிவபாதசுந்தரத்தினுடைய காதுக்குள் ஏதோ குசுகுசுத்துவிட்டு டாக்டர் நாகநாதனைப் பார்த்து 'நாகே, சிவபாதசுந்தரம் உங்களோடு சிறிது பேச விரும்புகிருர்" என்ருர். டாக்டர் நாகநாதன் ஒப்புக்கொண்டார். இருவரும் ஒரு புறமாகச் சென்று ஏதோ பேசினுர்கள். பின்னர் திரு. ஜீ. ஜீ, ஜெயநேசனிடம் "அவர்கள் முதலில் போகட்டும். நாங்கள் பிறகு கலைந்து போகிறேம்" என்ருர்.

திரு. ஜெயநேசன்: (டாக்டர் நாகநாதனைப் பார்த்து) அதற்கு சம்மதமா?

டாக்டர் நாகநாதன்: பொன்னம்பலம் கோஷ்டியாரையும் அனுப்பி விடுவீர்கள் என்று நீங்கள் உத்தரவாதம் அளித்தால் எங்களுக்கு சம்மதம் தான்.

திரு. ஜீ. ஜீ: (திரு ஜெயநேசனை இடைமறித்து) இல்லை, இல்லை. நாங்கள் இந்த இடத்தை விட்டு முதலில் போகிறேம். போகிற வழியில் எங்கள் ஆதரவாளர்களின் கடைகளைத் திறந்து வைக்கும் படி கேட்டுக் கொள்வோம். அவர்களும் திறந்து வைப்பார்கள். காடையர்கள் கற்களை வீசிக் குழப்பம் செய்யாமல் திறந்துவைத்திருக்கும் கடைகளுக்கு பொலீஸாராகிய நீங்கள் பாதுகாப்பளிக்க வேண்டும்.

திரு. ஜெயநேசன்: உங்கள் வேண்டுகோள் வேடிக்கையாக இருக்கிறது மிஸ்டர் பொன்னம்பலம். சட்டத்தை மீறிக் கடைகளைத் திறந்து வைக்கப் போவதாகச் சொன்னீர்கள். சட்டத்தைப் பாதுகாப்பதற்கு பொலீஸாராகிய நாங்கள் இருக்கிறேமே தவிர சட்டத்தை மீறுபவர்களுக்கு பாதுகாப்பளிப்பது எங்கள் கடமையல்ல. நாங்கள் பாதுகாப்பளிக்க முடியாது.

திரு. ஜீ. ஜீ: கடைகளைக் காலிகள் தாக்காமல் பாதுகாப்பது உங்கள் கடமைதானே?

திரு. ஜெயநேசன்: இன்று கடைகளைத் திறப்பது சட்டத்தை மீறிய செயலாகும்.

திரு. ஜீ. ஜீ: இல்லவேயில்லை, கடைகளைத் திறப்பது சட்டத்தை மீறுவதாகாது. திறந்து வியாபாரம் செய்வது தான் சட்டத்தை மீறுவதாகும் நான் இந்த சாப்புச் சட்டத்தை நன்ருகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

(இப்படி திரு. பொன்னம்பலம் கூறியதும் டாக்டர் நாகநாதனுக்கு ஆத்திரம் வந்து விட்டது)

டாக்டர் நாகநாதன்: (பொது மக்களுக்குக் கேட்கக்கூடியதாக உரத்த குரலில்) பொன்னு, என் தோழனே! நீ என்ன பேசுகிருய்? உன்னையே உன் வாயினுல் காட்டிக் கொடுத்து விட்டாய். உன் கபட நாடகம் அம்பலமாகி விட்டது. கடைகளைத் திறந்து வைத்து சட்டத்தை மீறப் போவதாகச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்த்தாய். இப்போது சொல்லுகிருய் கடைகளைத் திறப்பது சட்டத்தை மீறுவதாகாது என்று. அப்படியானுல் கடையைத் திறந்து சட்டத்தை மீறப் போவதாக நீ தம்பட்டமடித்தது வெறும் ஏமாற்றல்லவா? இந்த சூழ்ச்சிகளினுல் எவ்வளவு காலத்திற்கு நீ தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிருய்? நீ சட்ட மறுப்பு செய்யப் போகிறேன் என்று போட்ட வேஷத்தை உன் வாயாலேயே அம்பலமாக்கி விட்டாயே!


(டாக்டர் நாகநாதனின் இந்தப் பேச்சைக் கேட்டதும் பொன்னம்பலத்தின் திருகுதாளம் பொது மக்களுக்கு விளங்கி விட்டது. கூச்சலும் கலவரமும் அதிகரித்தன, கூட்டம் கட்டுமீறிக் கொதித்தது)

(8-ம் பக்கம் பார்க்க)

சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள், அதற்கு உட்பட்டு தமிழ் மொழியை நியாயமான அளவு உபயோகிப்பதற்கு தனி மசோதா படைக்கிறேம் என்பார்கள். இலங்கை குடியரசாகும்போது அடிப்படை உரிமைகளை வகுக்கிறேம் அதுவரை அமைதியாய் இருங்கள் என்பார்கள். ஆகஸ்ட் போராட்டத்தை உருக்குலைப்பதற்காக ஜூலையில் மண்டல சபைகளை அமைத்து மொழிவழி மாகாணங்களை உருவாக்குகிறேம் என்பார்கள் இந்த ஏமாற்றுச் சலுகைகளுக்கு வக்காலத்து வாங்கிப் பிரசாரம் செய்து தமிழ்ப் பேசும் மக்களின் ஐக்கியத்தையும் கட்டுப்பாட்டையும் உறுதியையும் முறியடிக்க இரண்டொரு தமிழ் தலைவர்களையும் விலைக்கு வாங்குவார்கள். தமிழ்ப் பேசும் மக்களிடையே சில புதிய அரசியல் காளான் கட்சிகளையும் காசு கொடுத்துத் தோற்றுவிட்பார்கள்.

இந்த மாயா மோகினித் திட்டங்களில் தமிழ்ப் பேசும் மக்கள் மதிமயங்கி ஏமாருமல் தங்கள் குறிக்கோளான சமஷ்டி அரசமைப்பும் அதன் மூலம் தமிழ் மொழிக்கு [illegible] அந்தஸ்தும் பெறும் வரை [illegible] நிச்சயம் விமோசனமடைவார்கள். இன்றேல் மீட்சியுற முடியாத அரசியல் படுகுழியில் மீண்டும் வீழ்ந்துவார்கள் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையில் பெப்ரவரி 4-ந் திகதி நடைபெற்ற துப்பாக்கி சம்பவத்தின் போது திரு. நடராஜன் என்பவர் தமிழ் மொழியின் உரிமையைப் பாதுகாப்பதற்காக உயிர் நீத்து வீரத் தியாகிகளின் வரிசையில் இடம் பெற்ருர். மற்றும் பலர் துப்பாக்கித்துண்டுகளுக்கும், ரவைகளுக்கும் இலக்காகி காயமும், படுகாயமுற்றனர். இரத்தம் சிந்திய அத்தகைய வீரர்களில் சிலரை மேலே படத்தில் காண்க.

1. பன்னிரண்டு வயது பள்ளி மாணவ வீரன் எஸ். மயில்வாகனம். ஒரு எஸ். ஜீ. குண்டு இவருடைய கண்ணுக்கு அருகாமையாக நெற்றியில் பாய்ந்தது. இவர் கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

2. வீரர் வி. நடராஜா. வயது 22. இவருக்கு தேகத்தில் 16 ரவைகள் பாய்ந்தன.

3. வீரர் கே. வெண்டரசன். இவர் நான்கு குண்டுகளுக்கு இலக்காஞர்.

4. வீரர் எஸ். கந்தசாமி வயது 30 இவர் மாணவன் எஸ். மயில்வாகனத்தைக் காப்பாற்றுவதற்காக பாய்ந்து ஒடுகையில் பதினுறு ரவைகளுக்கு இலக்காஞர்.

5. வீரர் எஸ். சிவப்பிரகாசம் வயது 28. இவர் தேகத்தில் நான்கு ரவைகள் பாய்ந்தன.

6. வீரர் எஸ் அருமைத்துரை இவர் தேகத்தில் எட்டு ரவைகள் பாய்ந்தன. மற்றும் எட்டுக் காயங்களும் ஏற்பட்டன. குண்டுகள் பாய்ந்த அடையாளங்கள் படத்தில் தெரிவதைக் காண்க. திரு. அருமைத்துரை மீன் வியாபாரம் செய்து வருகிருர். கடந்த ஆண்டு திருகோணமலையில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டு சிங்கள மீன்வியாபாரிகள் தமிழ் மக்களைப் புறக்கணித்த போது இவர் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டார். இன்று வரை இனப் பற்ருேடு இத் தொழிலை மேற் கொண்டு நடத்தி வருகிருர். குண்டுக்கு இலக்கான பின்னும் அவர் தமது மீன் வனியோக சேவையை தம்மாலான வரையில் தமிழ் மக்களுக்குச் செய்து வருகிருர்.

கீழேயுள்ள படம்: துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற திருகோணமலை மணிக்கூண்டுக் கோபுரத் தடியையும் அது சமயம் அங்கு கூடி நின்ற பெருந் திரளான [illegible] கீழேயுள்ள படத்தில் காண்க.

# உரிமை இழந்து கடமை செய்யோம்

# அறப்போர் தொடுக்கவும் நாம் தயார்

## தமிழ் ஆசிரியைகள் அறிவிப்பு

"தமிழ் ஆசிரியைகளாகிய நாம் இன்று தாங்கொணுக் கஷ்டங்களை அனுபவிக்கிருேமென்ருல் அதற்கு ஒரே ஒருகாரணம் நாம் தமிழராய்ப் பிறந்துதான எங்களில் பலர் முஸ்லிம் பாடசாலைகளில் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டு வருகிருர்கள்

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த நிலை இனிமேல் நீடிக்க முடியாது. நாம் எந்தப் பாடசாலையில் கடமையாற்றினுலும் முழு உரிமையுடன்தான் இருப்போம். இது மறுக்கப்படின் அறப்போர்! மறக்குல (ஆசிரிய) மாதரின உரிமைப்போர்! வெற்றிகிட்டுமளவும் ஈழமெங்கும் கொட்டும் எங்கள் போர் முரசு ஆளவந்தாருக்கு இதை இன்று அறிவிக்க ஆசைப்படுகிறேன்"

மேற்கண்டவாறு கொழும்பு தில் வீதி அரசினர் மத்தியக் கல்லூரி மண்டபத்தில் கடந்த 10-ந் திகதி நடந்த மேல் மாகாண அரசினர் பாடசாலை ஆசிரியைகள் சங்கக் கூட்டத்தில் பேசிய திருமதி ப. சுகிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திருமதி ஈஸ்வரி இராமநாதன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினுர்.

பல ஆசிரியர்கள் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தார்கள். செல்வி கலி ந கந்தையா, என் சிவசுப்பிரமணியம், ப. சுப்பிரமணியம், த. நவரத்தினம், மார்கிறேட் வில்லி பிரான்சிஸ், எம். அழகரத்தினம் உட்படப் பலர் கூட்டத்தில் பேசினுர்கள். ஈற்றில் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. அரசினர் முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாததால் அவர்களை உடனடியாகத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு மாற்ற வேண்டும்.

2. ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடன் தற்காலிகமாகக் கடமையாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ் ஆசிரியைகளை உடனடியாக மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இனி மேல் எக்காரணம் கொண்டும் அவர்களை வேலை நீக்கம் செய்யக் கூடாது.

3. ஆசிரியைகளுக்கு பாரபட்சமின்றி சேவை மூப்பு அட்டவணைப்படி பதவி உயர்வு அளிக்க வேண்டும்.

## ஜீ ஜீ. யின்...


(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் நாகநாதன்: தோழர்களே, தொண்டர்களே, வாருங்கள் நாம் போவோம். பொன்னம்பலத்தைக் கவனிப்பது இனிப் பொலீஸாரின் வேலை.

இப்படிச் சொல்லிக் கொண்டே டாக்டர் நாகநாதன் கூட்டத்தை அழைத்துக் கொண்டு முன்னேறினுர். இந்த சந்தர்ப்பத்தில் யாரோ ஒரு காங்கிரஸ்காரர் பெண் தொண்டர் மீது கல்லொன்றை விட்டெறிந்தார். அக்கல் திருமதி அமிர்தலிங்கத்தின் தலையில் விழுந்தது. அவ்வளவு தான் கூட்டம் கட்டுமீறி விட்டது. பொலீஸார் குண்டாந்தடிப் பிரயோகத்தை ஆரம்பித்தனர். பொலீஸ் குண்டாந்தடிகள் திரு பொன்னம்பலத்தின் மீதும் விழுந்தன. கூட்டம் அல்லோல கல்லோலப் பட்டது. ஒருவர் திரு. பொன்னம்பலத்தைத் தாவிப் பிடித்து இழுத்தார். சிறிது நேரத்தில் அவர் காணுக்குள் தூக்கி வீசப்பட்டார். சிலர் கானிலிருந்து அவரை வெளியே இழுத்தெடுத்தனர். கூட்டத்துடன் கூட்டமாக அவர் நழுவிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவர் தட்டுத் தனியராக "சுபாஸ் கபே" யின் முன் காணப்பட்டார். அவ்வளவு தான். அதற்குப்பின் அவரும் அவர் சகாக்களும் எங்கு [illegible] தார்த்தியானம் [illegible] என்பதை யாருமே அவதானிக்க முடியவில்லை.

இயற்கையான
ஆரோக்கியத்திற்கும் சக்திக்கும்
விட்டமின் ஏ, பி, பி$_{2}$, பி$_{6}$, ஈ
முதலியவை நிறைந்த
"விட்டா, பி"

VITA,B
For NATURAL HEALTH & VIGOUR
CONTAINING VITAMINS A B$_1$ B$_2$ B$_6$ E E7 OTHER FACTORS



IDEAL FOR CHILDREN IN PROMOTING STURDIER HEALTH
DISTRIBUTORS :-
M. M. MAHUTHOOM PILLAY & CO
5, DAM ST., COLOMBO PHONE 5477

குழந்தைகளின் சுகாதாரமான வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது
ஏக வினியோகஸ்தர்கள்:
எம். எம். மகுதூம்பிள்ளை & கோ.,
5, டாம் வீதி, கொழும்பு போன்: 5477.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய உலகம்:

# குட்டிப் பதவிக்காகச் சமூகத்தைக் காட்டிக் கொடுப்பதா?

—101—

## இன்று முஸ்லிம்களைத் தட்டிக்கொடுக்கும் அரசாங்கம் நாளை அவர்களை மட்டந் தட்டலாம்

அந்த நாளில்...! ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னர்...! காட்டரபிகளின் மத்தியில் கொள்கைக்காக வாழ்ந்தார் ஒரு கோமான்! "செங்கதிரும் தண் மதியும் சேர்த்து கையில் தந்திடினும் என்கொள்கை விடமாட்டோம்" என்ற உறுதிப்பாட்டோடு அடுத்தடுத்து வந்த எதிர்ப்பையும் அதன் பயனாய்க் கிடைத்த தாங்கொணாத் துன்பத்தையும் பொருட்படுத்தாது 23 வருடங்கள் இடைவிடாது உழைத்து ஏக இறைக் கொள்கையை நிலைநாட்டியும் பேதமற்ற இஸ்லாமியப் பெருங்குடியைத் தோற்றுவித்தும் போந்தார் பெருமானார் (ஸல்) அவர்கள்.

அன்னாரின் வழித் தோன்றல்கள் நாம், நம்மத்தியில் "தலைவர்கள்" சிலர் அவர்களை நினைத்தால் வெட்கம்... வேதனை...விரகதாபம்...!

அவர் எங்கே!
இவர்கள் எங்கே?

எழுத்தறிவில்லாத மக்கள் மத்தியில், எழுத வாசிக்கத்தெரியாதவனாக வாழ்ந்து எடுத்துக்கொண்ட கருமத்தைத் தொடுத்துமுடித்த எம்பெருமானாரின் கொள்கைத் தத்துவம் எங்கே;

மருத கலைதாசன்

கேவலம், அற்பசொற்ப பதவிக்காக தன் சமூகத்தைக் காட்டிக்கொடுப்பதோடு மட்டுமில்லாது சுயமரியாதையிழந்து சொந்தக் கொள்கையை விட்டுக் கொடுக்கும் இவர்களின் ஏமாளித்தனம் எங்கே. கோடிகோடிகுவித்தாலும் கொடிகட்டி மன்னனாக வாழ்ந்தாலும் கொள்கையை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று வீரகர்ஜனை செய்த கோமான் முகம்மது நபியின் உறுதியெங்கே குட்டிப்பதவி ஒன்றுக்காக இஸ்லாமியர்களைப் பௌத்தர்களாக்கவும் துணிந்துநிற்கும் இருமுகம் படைத்த இவர்களின் சலன புத்தி எங்கே!

### நம்பினால் நாசம்

சாதாரண மக்கள் பெருமைமிக்க பெருமானாரின் கொள்கையை முடிந்தவரை பின்பற்றி நடக்கிறார்கள். தங்களை "இஸ்லாமியத் தலைவர்கள்" என்று பலவிடங்களிலும் பறைசாற்றிக்கொள்ளும் 'பெரிய மனிதர்கள்' பெருமானாரின் கொள்கையைக் காற்றிலேபறக்கவிட்டு விட்டார்கள். இல்லாவிட்டால் இன்றையச் சிங்கள அரசாங்கத்திடம் மடிப்பிச்சை கேட்டு மண்டியிட்டிருக்கமாட்டார்கள். பொதுநலம் கருதி வாழ்ந்த நாயகத்தின் வழிவந்த ஈழத்து இஸ்லாமியர்கள், சுயநலத்தில் நம்பிக்கை வைத்துநிற்கும் இக் குரங்காட்டக்காரர்களை இன்னுமா தலைவர்களாக ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்? நாளுக்கொருகொள்கை ஆளுக்கொரு கட்சி என்ற ரீதியில் ஆட்டிக்கொண்டிருக்கும் இத்தகைய "தலைவர்களை" நம்பினால் முஸ்லிம் சமூகத்துக்கு விமோசனமே யில்லை.

### இஸ்லாம் பௌத்தமாகலாம்

அற்பாசைக்காக அந்நிய மொழியையும் ஆள்வோரையும் ஆலிங்கனம் செய்யும் ஆஷாடபூதித் தலைவர்களுக்கு வீழ்ச்சி கிட்டும் நாள் அண்மிவிட்டது. மொழி வெறியால் முஸ்லிம்களை இளையசகோதரனாகக் கருதும் இன்றைய அரசாங்கம இன்னும் கொஞ்சக் காலத்தில் இஸ்லாமியர்கள் என்ற பேச்சுக்கே இடந்தராமல் போகக் கூடும். நாளாந்த உச்சஸ்தாயிக்குச் சென்றுகொண்டிருக்கும் ஆள்வோரின் 'சிங்களாபிமானம்' கூடிய விரைவில் முஸ்லிம்களை 'பௌத்தர்'களாகத் தாண்டவும் கலங்காது என்பதை முன்கூட்டியே முஸ்லிம் பெருங் குடிமக்கள் மனதில்பதித்துக்கொள்ளவேண்டும்.

### வேண்டுவது தொண்டு

இந்த நிலையில் வாழு,வாழவிடு என்ற கொள்கையில் வழிகாட்டிச்சென்ற பெருமானார் நபியின் வழிவந்த முஸ்லிம்கள் —இலங்கையின் தமிழ்ப்பேசும் பெருங்குடி முஸ்லிம்கள் தலைவர்கள் கிடைக்கும் அற்பசொற்ப சலுகைகளை உதறித்தள்ளிவிட்டு நல்ல உள்ளத்தோடு சமுதாயத்தொண்டு செய்ய முன்வரவேண்டும்.

---

# சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 35.

## ரொக்கப் பரிசு-ரூ 1000.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | இரண்டாவது பரிசு ரூ. 300-00

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 20-2-57 பி. ப. 5 மணி | சரியான விடை 24-2-57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றோர் விபரம் 3-3-57ல் பிரசுரிக்கப்படும்

பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 12-3-57ல் செக் மூலம் அனுப்பப்படும்

### இடமிருந்து வலம்

1. உலகத்தின் வாழ்வுக்கும் வளத்திற்கும காரணமாய் இருப்பதனால் இதைப் போற்றுவோம் என்று பாட்டிசைத்தான் பழந் தமிழன்.

2. நினைத்தபடி எல்லாம் நடந்துவிட்டால் ஒருவன் மனத்தில் இது ஏற்படாமல் போகுமா?

7. வஞ்சகம் நிறைந்த நடிப்பு.

9. இவள் ஒருத்தி வீட்டில் இருந்தால் வீட்டிலுள்ள சகல பொருட்களும் துப்புரவாக வைக்கப்பட்டிருப்பது சகஜம்.

10. ஊற்றுப் பேனாவாக இருந்தபோதிலும் இது இல்லாவிட்டால் எப்படி எழுதுவது?

12. ஒரு மொழியைப் படித்தால்மட்டும்போதாது, அதை முறையாகப் பிரயோகிப்பதற்கு இதுவுந் தெரிந்திருக்க வேண்டும்.

13. பிணமுள்ள இடத்தில் வட்டமிடும் பறவை.

14. பழங்காலத்தில் விதவைக்கோலம் பூண்டவர்கள் இது இட்டுக்கொள்ளக்கூடாதென்பது ஒரு வழக்கம்.

15. பாராளுமன்றத்தில் இதைப்போல் உட்கார்ந்து கையை மட்டும் தூக்கும் பிரதிநிதிகளும் சிலர் இருக்கிறார்கள்.

17. இவன் "மேலிருந்து கீழ் 17" சாத்திரத்தில் விற்பன்னன்.

18. மலைப்பிரதேசங்களில் இதன் சரிவினால் பல விபத்துக்கள் ஏற்படுவதுமுண்டு.

19. "கற்க கசடற கற்பவை கற்ற பின்,......அதற்குத் தக" என்பது குறள்.

20. ஏரியின் நீர்ப்பாசன ஜலதாரையிலுள்ள இதை இறுகப் பூட்டி வைக்காவிட்டால் நீர் வீணாக வடிந்து நஷ்டமாகும்.

22. மனவுறுதி தளர்ச்சியுற்ற பலவீன நிலை.

23. நாவரண்டு இது அதிகமாக ஏற்பட்டால் அழுக்கு நீரையும் பொருட்படுத்தாமல் மண்டச் சொல்லும்.

24. ஒரு உலோகத்தின் பெயர் ஒரு பாத்திரத்தையும் குறிக்கும்.

### மேலிருந்து கீழ்

1. நினைவு அற்றுப்போதல்.

3. இதற்குள்ளானவனுடைய முகத்தில் மலர்ச்சி குன்றிப்போயிருக்கும்.

4. மண்ணினால் செய்யப்பட்ட ஒரு இசை வாத்தியம்.

5. மரியாதை இன்மை.

6. கூர்மை

8. இது வந்திடப் பத்தும் பறந்திடும் என்பது பழமொழி.

11. நீர்வளம் உள்ள பிரதேசங்களில் பயிர் பச்சைகள் எப்போதும் இப்படியாகவிருக்கும்.

12. தமக்கு ஒரு......வேண்டுமென்று யாத்திரை போகும் பணக்காரத் தம்பதிகளும் இருக்கிறார்கள்.

13. இடமிருந்து வலம் 24ஞல் ஆக்கப்பட்ட இதன் மூலம் மின்சாரம் இலகுவில் ஊடுருவிப் பாய்கிறது.

15. ஆபரணம்

16. குற்றவாளியின் பார்வையிலிருந்து அவன் இதஉள்ளவனா இல்லையா என்பதை சில பொலீஸ் அதிகாரிகள் எளிதில் கண்டுபிடித்துவிடுகின்றனர்.

17. இடமிருந்து வலம் 17ல் உள்ளவன் இந்த சாத்திரத்தைப் பயின்றிருப்பான்.

18. சந்திரன்

19. உண்மை

21. பத்து என்று பொருள்படும் இது இலிகையையும் குறிக்கும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஞா | யி | று | ■ | 2 கு | 3 | 4 | ல | ம் | ■ |
| | ■ | ■ | 5 அ | ■ | க் | ட | ■ | ■ | 6 க |
| 7 க | 8 | ட | | ட | | ம் | ■ | 9 | |
| 10 | சி | ■ | சா | ■ | ம் | ■ | 11 | ■ | மை |
| ற | ■ | 12 ம | | பு | ■ | 13 | ழு | கு | ■ |
| 14 | ல | | ம் | ■ | 15 வா | | மை | ■ | 16 க |
| ■ | ■ | | ■ | 17 சி | | பி | ■ | ■ | |
| 18 | ண் | ■ | 19 நி | | க | ■ | 20 | 21 த | வு |
| தி | ■ | ■ | 22 | ப | ல | | ■ | | ■ |
| ■ | 23 தா | | ம் | ■ | | ■ | 24 | ம் | |

பிரவேசக் கட்டணம் ஒரு கூப்பனுக்கு சதம் 50 மூன்று கூப்பன்களுக்கு ரூபா 1-00.

பெயர் ____________

விலாசம் ____________

____________

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை ______

கட்டணத்தின் தொகை ரூ___சே___

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள் ______

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 35

த. பெ. இ 1183, கொழும்பு.

---

### சாம்பற்றீவில் த. அ. க. கூட்டம்

சாம்பற்றீவில் சாம்பற்றீவு தமிழ் அரசுக் கட்சி கிளை கூட்டம் சென்ற 28-1-57ல் தலைவர் பொ. தங்கராசா தலைமையில் கூடியது. கூட்டத்துக்கு சாம்பற்றீவு கிராம பொது மக்களும் மாதர் சங்க பிரதிநிதிகளும் திரளாக சமூகமளித்திருந்தனர்.

ஜனாப் ஏ. ஆர். எம். யூசுப், கிராமக் கமிட்டி அங்கத்தவர் திரு வ. தம்பிராசா, பொ. இராசதுரை, ஆ. சுப்ரமணியம் முதலியோர்கள் கூட்டத்தில் பேசினார்கள்.

---

வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# அன்புத் "தோழி" ரோஸ்

மூலம் : மாபசான் ★ —— ★ தமிழில் : கோசுதா

★ கரை காணமுடியாத காதல் வெள்ளம் கட்டழகியின் உள்ளத்திலே!

★ தொட்டுப் பழகித் தொண்டு செய்யவும் காதல் கதை சொல்லிக் குஷிப் படுத்தவும் கிடைத்தாள் தேடற்கரிய தோழி ஒருத்தி!

★ அவளே, ஸ்திரீலோலன்—கன்னியரைக் கற்பழித்த குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்ற துரோகி என்று நிரூபணமாவதானால் தலைவியின் மனோநிலை......?

இரண்டு வாலிபப் பெண்கள் பெரிய வண்டியில் தனியேதான் இருந்தார்கள்; அவர்கள் கையில் பூக்கொத்துக்கள் வைத்திருந்ததால் பூக்களால் புதைக்கப்பட்டவர்கள்போல் காணப்பட்டார்கள். அந்த வண்டியின் முன்னால் இருந்த அழகான பெட்டியில் விதவிதமான பூக்கள் காட்சியளித்தன. அவர்கள் மேனியைப் பூக்கள் மறைத்திருந்தாலும் அவர்கள் புஜமும், கரங்களும் எப்படியோ வெளியே தெரிந்தது. ஒருவள் நீல உடை அணிந்திருந்தாள். மற்றவள் மங்கிய மஞ்சளும் சிவப்பும் கலந்த ஆடை உடுத்திருந்தாள்.

அவர்களது அலங்கரிக்கப்பட்ட வண்டி போன்சியர் என்ற இடத்தை அடைந்ததும், அந்தப் பாதையின் வழியே அதுபோன்ற வண்டிகள் இருபுறமும் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தன. வண்டியிலே இருந்தவர்கள் பந்துபோல் பூக்களால் எறிந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்து அவர்களது முகங்கள் பூரிப்படைந்து கொண்டிருந்தன. அங்கு கீழே விழுந்த பூக்களை எடுக்கச் சின்னஞ் சிறுவர் கூடினர். பணக்காரர்களான வண்டியிலிருப்பவர்களோடு சாதாரண மக்களின் தொடர்பு ஏற்பட்டுவிடக்கூடாதே என்று, ஆச்சரியமாக வண்டியிலிருப்பவர்களைப் பார்க்க நடந்துவந்த சாதாரண மக்களை மிருகத்தனமாக பொலீசார் நடத்தினர். ஆனால் இந்நிலையில் தொடர்ந்து ஒருவர் மற்றொருவரை அழைத்துப் பூக்களால் விளையாடிக்கொண்டே இருந்தனர். இந்த நேரத்தில் இன்னொரு வண்டி வந்தது. அதில் அழகான பெண்கள் வந்தார்கள். பேய்போல் சிவப்பு உடை அணிந்து பிறர் ரசிக்கும் பாவனையில் அவர்கள் தோற்றமளித்தார்கள். அக்கூட்டத்தில் ஒருமனிதன் நான்காம் ஹென்ரிபோல் வினோத உடை அணிந்திருந்தான். பூக்கொத்துக்களை எறிந்த காட்சியை அவர்கள் இருவராலும் மறக்கமுடியவில்லை. அவர்கள் பூக்களால் எறிந்து விளையாடிக்களைத்தபின் வண்டிக்காரனை கடற்கரை வழியாக கோல்ப்ஜோனுக்குப் போகும்படி கூறினார்கள். வண்டியும் போனது.

சூரியனும் மேகத்திரையைக் கண்டு மலைக்குப் பின்னால் மறைந்தது. கடலோ அமைதியைத் தாலாட்டி மேகத்தின் நீல ஓரத்தை நனைத்துக் கொண்டிருந்தது. பறவைகள் கூட்டிலிருந்து மாலைக் கீதத்தை இசைத்தன. ஆம் இரவின் ஒளியை ஏற்ற நேரமாகிவிட்டது என்பதை இந் நிகழ்ச்சிகள் அறிவித்தன. இந்த இயற்கையைச் சுவைத்த ஒருவள் "இப்படித் தேடக்கிடைக்காத மாலைப் பொழுதில் எல்லாமுமே திருப்திகரமான முறையில் இருக்கிறது இல்லையா மார்க்கோற்?" எனக்கேட்டாள்.

ஆமாம், ஆனால் ஒன்றுதான் குறைய இருக்கிறது என்றாள் மற்றவள். தொடர்ந்து அவள் சொன்னாள்: "ஒருவேளை நீ மறந்திருக்கலாம். நாம் பிறரால் புகழப்பட்டாலுங்கூட, நாம் மேலும் மேலும் நமது இதயதாகம் திரும்வரையில் அதிகப்படியான ஒன்றைத்தானே விரும்புகிறோம்" என்றாள். இதைக்கேட்டதும் மற்றவள் முகம் மலர்ந்தது.

"காதலைப்பற்றித்தானே நீ கூறுகிறாய்?" இப்படிக் கேட்டாள் மற்றவள். ஆமாம், என்ற பதிலுக்குப் பின் அவர்கள் இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். அதன்பின் மார்க்கோற் முணுமுணுத்தாள் "காதல் இல்லாத வாழ்க்கை வாழ்க்கைபோலவா இருக்கிறது. நாம் யாராலாவது நேசிக்கப்படவேண்டும், நாயாய் இருந்தாலுங்கூடப் பரவாயில்லை. பொதுவாக எல்லாப் பெண்களுமே நாயால் நேசிக்கப்படுவதைத்தானே விரும்புகிறார்கள். நீ என்ன சொல்கிறாய் சிமோனி?"

"உம் அப்படியெல்லாம் இல்லை, என்னைப்பொறுத்த மட்டில் என்னை யாராவது ஒருவர்தான் நேசிக்கவேண்டும். உதாரணமாக நான் அவரால் நேசிக்கப்பட்டால் எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும். அவர்....அவர்.... என்று கூறிக்கொண்டே தன்னை யாராவது நேசிக்கமாட்டார்களா என்றுபரந்த உலகத்லைதப் பார்த்தாள். சுற்றுப்புறம் பார்த்த அவள் வண்டிக்காரன் அணியவேண்டிய உடையின் பின்புறத்தில் மாட்டியிருந்த பித்தளைப் பொத்தான்களைப் பார்த்ததும் தான் பேச ஆரம்பித்ததை மறந்துபோய் 'அவர்...... இந்த வண்டிக்காரன்தான்'' என்று வார்த்தையை முடிக்காமல் சிரித்தாள்.

மார்க்கோற் சிரித்துக்கொண்டே மெதுவாக மற்றவளிடம் உண்மையிலே வேலைக்காரனால் காதலிக்கப்படுவது சிரிக்கப்படுவதற்குரிய விஷயம்தான். எனது வாழ்க்கையில்கூட இரண்டு மூன்று தடவை இப்படி நேர்ந்திருக்கிறது. ஆனால் இப்படிக் காதலிப்பதில் என்னவது ஒருநாள் இருவரில் ஒருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு யாராவது பார்த்துவிட்டால் பிரிந்துவிடவேண்டியதுதான் என்று அவள் சொன்னாள்.

"என் வேலைக்காரன் காதலனாக இருந்து என்னைத் திருப்தி செய்யமாட்டான் என்று எனக்கு நன்றாய்த் தெரியும் ஆனால் உன் வேலைக்காரர்கள் உன்னை எப்படிக் காதலித்தார்கள் என்று கூறமாட்டாயா?" என சிமோனி கேட்டாள்.

"ஓ அவர்கள் சபல புத்திக்காரர்கள். அவர்களாகப் பேசவும் மாட்டார்கள். ஏதாவது கேட்டாலும் பதிலே சொல்லமாட்டார்களே!"

"பதில் சொல்லமாட்டார்கள்தான்...... ஆனால் அவர்களைக் கோபமூட்டிக் காதலிப்பது நல்லதா அல்லது புகழ்ந்து காதலிப்பதா? எது நல்லது?" எனக்கேட்டாள் மற்றவள்.

"கோபமூட்டியா? சேச்சே கூடவே கூடாது. ஆம்...... புகழ்ந்துதான்...... உன்னையும்தான் யாராவது காதலிக்க ஆரம்பித்தால் புகழ்ந்து பேசுவது சகஜமாகிவிடுமே! எனது வாழ்க்கையில் நடந்த ருசிகரமான நிகழ்ச்சியைக் கேளென்று அவள் ஆரம்பித்தாள். சிமோனி கேட்டாள்.

★

"நான்கு வருடங்களுக்கு முன் இலையுதிர்காலத்தில் வேலைக்காரப் பெண் கிடைக்காமல் நான் இருந்தேன். வேலைக்கு என்னிடம் வந்தவர்களோ சுத்த மடையர்களாய் இருந்தார்கள். நல்ல வேலைக்காரியே கிடைக்கமாட்டாளா என்று கலங்கியநேரத்தில், முடியலங்கரிக்கவும், தைக்கவும் தெரிந்த ஒரு பெண் வேலை தேடுவதாகப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி இருந்ததைப் பார்த்தேன். ஆங்கிலமும் அவளுக்குப் பேசத் தெரியும் என்பதையும் அந்த விளம்பரத்தில் பார்த்ததும் அவளை வரும்படி எழுதி அனுப்பினேன். அவளும் வந்தாள்.

அவள் உயர்ந்த உயரமுடையவளாய் இருந்தாலும் மெலிந்த தேகமுடையவள். சற்று மங்கிய நிறமுடையவள்தான் அவள் கண்களோ கறுப்பு பார்ப்பதற்குக்கவர்ச்சியாய் இருந்த அவளிடம் நாணம் இருந்தது. இதற்கு முன் எங்கெல்லாம் வேலை செய்தாய் என்று கேட்டேன். யாம்வெல்சிமாட்டி வேலையாளில் ஒருவளாய்ப் பத்து வருடங்களாய் வேலைசெய்ததாகக்கூறினாள். அத்தாட்சிப் பத்திரமும் காட்டினாள்." இவள் தனது விருப்பப்படியே பிரான்ஸை திரும்புகிறாள். இவள் வேலை செய்த காலத்தில் பிரான்சுக்கு ஒருதடவை திடீரென்று போனதைத் தவிர இவளைக் குறை கூறுவதற்கு ஒன்றுமே இல்லை" என்று அதில் குறிப்பிட்டிருந்தது. அவளது ஆங்கில உச்சரிப்பும் என்னைச் சிரிக்கவைத்தது. எப்படி இருந்தபோதிலும் அந்த நேரத்தில் என்னவோ அவளை வேலைக்கு எடுப்பதாகக் கூறிவிட்டேன். அவளும் அன்றைக்கே வேலைக்கு வந்தாள். அவள் பெயர் தான் ரோஸ்.

ஒருமாதத்திற்குள் அவளைப்பற்றி நான் அதிகம் கூறவிட்டாலும் அவள் நிகரற்றவள் என்று என்னால் கூறாமல் இருக்கமுடியவில்லை. முடியலங்கரிப்பதில் அவளுக்கு நிகர் அவளேதான். தொப்பி அணிவிக்கும் முறையில் பெரிய செல்வந்தர்களிடம்கூட அப்படி நாகரிக முறையைக் காணமுடியாது: அவளுக்கு ஆடைகளும் தைக்கத் தெரியும் என்பதை நினைக்கும் போது பெருமிதமடைந்தேன். அவளைப் போல் ஒரு வேலைக்காரி என்னிடம் இருந்ததே இல்லை. வேலைக்காரர் கை நம்மீது படுவதைப்போல் வெறுப்பு எனக்கு வேறொன்றும் கிடையாது. இதை அறிந்துதானோ என்னவோ அவளது கரங்களை என்மீது படவிடுவது கிடையாது. அவள் எனது மூமேனியை அழகு படுத்தும்பொழுது எனக்கு ஆனந்தம் பொங்கிவரும். நான் குளித்து வந்தபின் என்மேனியை அவள் தடவிவிடுவதை எல்லாம் நினைக்க வேலைக்காரியாய் ரோஸ் இருக்காமல் தோழியாய் இருந்தாள் என்றே கூறத் தோன்றும்.

உம்...... ஒருநாள் காலையில் நம்பிக்கையுள்ள கூலிக்காரன் ஒருவன் "அம்மா பொலீஸ் இன்ஸ்பெக்டர் கீழே வந்திருக்கிறார்" என மெதுவாகச் சொன்னான்.

"ஏன் எதற்காக அனுமதிக்கவேண்டும்?" எனக் கோபத்தில் நான் பதில் கூறினேன்.

"அம்மா! யாரோ ஒரு குற்றவாளி இங்கு மறைந்திருப்பதாக அவர் சொன்னார்" என்றான் அவன். இதைக் கேட்டதும் நான்பயந்தேன்: இன்ஸ்பெக்டருக்கு எல்லாம் காட்டு என்று கூறினேன். அதன்பின் இன்ஸ்பெக்டர் வந்தார். என்னிடம் முதலில் மன்னிப்புக் கோரிக்கொண்டு குற்றவாளி ஒருவன் என் வீட்டில் இருப்பதாகக் கூறவே நான் வாயடைத்துப் போனேன்.

அதன்பின் எனது வேலைக்காரர்கள் எல்லோருடைய பெயர்களையும் நான் சொன்னேன். இன்ஸ்பெக்டர் அப்பெயர்களிலெல்லாம் தான் தேடிவந்த பெயர் இல்லை. என்றார். ஒருவேளை தவறுதலாய் அவர் வந்திருக்கலாமென்று நான் கூறினேன். இல்லவே இல்லை என்றார் அவர். மீண்டும், "தயவு செய்துஉங்கள் வேலைக்காரர்களை எல்லாம் காட்டுங்கள்" என்று என்னைக் கேட்டார். முதலில் நான் மறுத்தாலும், வேலைக்காரிகளையும், வேலைக்காரர்களையும் வரும்படி அழைத்தேன். அவர்களிலும் அவர் தேடிவந்த குற்றவாளி இருக்கவில்லை. வேறு எனது சொந்த வேலைக்காரியைத் தவிர இங்கு யாருமே கிடையாதே என்றதும், அவளைப் பார்க்கலாமா எனக் கேட்டார். நானும் சம்மதித்து ரோஸை அழைத்தேன். அவளும் உடனே வந்தாள். அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டர் சமிக்ஞை காட்டவே இருவர் அவளைப் பிடித்துக் கட்டிஅடித்தார்கள். எனக்கு இதைப் பார்க்கப் பொறுக்கவில்லை, கதறினேன். அவளைக் காப்பாற்ற என்னால் ஆன மட்டும் செய்து பார்த்தேன்; இன்ஸ்பெக்டர் விட்டாற்றானே! அவர் சொன்னார்!

(12-ம் பக்கம் பார்க்க)

## உலகத்தையும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறதே ஒழிய கலைஞர்கள் சிரஞ்சீவியாக இருப்பதில்லை. சிலர் உயிருடன் இருக்கையிலேயே மறைந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு ஆதரவும் இல்லாமலே யே போய்விடுகிறது.

### ஆதரவு வேண்டும்

ஆனால் காலம் மாறிவிட்டது. இனி உண்மையிலேயே கலைஞனின் பண்பறிந்து அவனை இந்த நாடு கைவிடாது கவனிக்கும். நான் விரும்புவதும், நாடுவதும் அதுவே. இசை வெள்ளம் பிரளயமாக வரவேண்டும். அது இந்த உலகின் தீய செயல்களையும், பாவங்களையும் அடித்துச் செல்லவேண்டும். அதன் பின்னர் அன்பு வளர வேண்டும். அறம் தழைக்கவேண்டும், ஈகை மிகவேண்டும். பண்பு உயரவேண்டும். வாழ்வு வளமாக, சுவையாக விளங்கவேண்டும்.

—

## தயாரிப்பில்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ராவ், எஸ். வி ரங்காராவ், டி. ஆர். ராஜகுமாரி, கே. கண்ணன், வசந்தராதேவி, எம். என். ராஜம், எஸ். சாந்தி ஆகியோர் நடிக்கின்றனர். திரைக் கதை வசனத்தை விசுவநாதன் பி. ஏ. யும் டைரக்ஷன் டி. ஆர் ரகுநாத்தும் கவனிக்கின்றனர்.

### கலையரசி

செவ்வாய் மண்டலத்தின் அற்புதங்களை விளக்கும் இப் படத்தை சரோடிபிரதர்ஸ்சார் தயாரிக்கின்றனர். இதில் எம். ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி, (இரு வேடத்தில்) பி. எஸ். வீரப்பா, இன்னும் பலரும் நடிக்கின்றனர். திரைக் கதை வசனத்தை டி. இ. ஞானமூர்த்தி எம்.ஏ; பி. ஓ. எல். எழுதுகிறார். டைரக்ஷன் வி. கிருஷ்ணன்.



வல்வெட்டித்துறை மக்கள் கடந்த நாலாந் திகதியைத் துக்க தினமாக அனுஷ்டித்தனர். இதை யொட்டி தமிழ் பேசும் மக்களுக்குத் தீங்கிழைக்கும் சட்டங்களைப் பிரேத ஊர்வலமாக எடுத்துச் சென்று [illegible] உரிமைக் கோஷங்கள் பொறித்த அட்டைகளுடன் பட்டின சபைக் கட்டிடத்தைத் தாண்டிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் முஸ்லிம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியிலுள்ள கந்தையா விற்கும். வேலுப்பிள்ளைக்கும் இருக்கவே இருக்கும் என்பதை என் முஸ்லிம் நண்பர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

### காந்தி யார்?

மூன்றாவதாகக் காந்திஜி தமிழர் என்பதற்காகத் தான் தமிழர்கள் அவரைக் கொண்டாடுகிறார்கள். ஜனாப் ஜின்னாவைப் பாராட்டவில்லை என்பது நகைப்புக்கிடமான ஓர் வாதம். இப்படியான சாதாரண உண்மைகளை தெரியாதவர்கள் எப்படித்தான் ஆசிரியராகினார்களோ? என் நண்பர்களிடம் நான் கேட்கிறேன். காந்தி தமிழரா? இப்படியான பச்சைப் பொய்யை ஏன் ஒரு பாவமுமறியாத முஸ்லிம் மக்களிடத்தில் விதைக்கிறீர்கள்? குஜராத்தியரான காந்தியை ஏன் தமிழர் என்று சொல்கிறீர்கள்? தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள், இந்துஸ்தானியர், பஞ்சாபியர், குஜராத்தியர், மராத்தியர், வங்காளிகள், சீக்கியர்கள், ரஜபுத்தானியர் என்ற பல்வேறு சாதியினரையும், பலவேறு பாஷை பேசும் மக்களையும் கொண்ட உபகண்டமான இந்தியாவைத் தமிழ்நாடு என்றும், அங்கு இருப்பவர்கள் எல்லாம் தமிழர்கள் என்றும் ஏன் கயிறு திரிக்கிறீர்கள்? தங்கள் பூமிசாஸ்திர அறிவின் இலட்சணம் இதுதானா? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல உங்களுக்குத் தெரியாதா?

### புதுமையான புரட்சிக்காரர்

நாங்கள் காந்தியைக் கொண்டாடுகிறோம் என்றால் அதன் காரணம் இதுதான்: அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா, துருக்கி, அயர்லாந்து மக்கள் சீனா, ருஷ்யா, எகிப்து, மொராக்கோ, சைப்ரஸ், முதலிய நாடுகளில் நடந்த, நடந்து கொண்டிருக்கிற சுதந்திரப் போராட்டங்களைப் பற்றியும், அப்போராட்டங்களை நடத்திய மாபெரும் தலைவர்களைப்பற்றியும் தமிழர்களாகிய நாங்கள் அறிவோம். ஆனால் இத்தனை தலைவர்களையும்விட்டுவிட்டுக் காந்தியைப் போற்றுகிறோம். ஏனென்றால், அவர் சரித்திரம் காணாத ஓர் புதிய புரட்சியையும், அஹிம்சா என்ற அஸ்திவாரத்தையும் கண்டுபிடித்தார் என்பதற்காகத்தான். பிறரைப் புண்படுத்தாத வகையில் அந்த அஹிம்சா போராட்டத்தையே நாங்களும் பயன்படுத்தப் போகிறோம் என்பதற்காகத்தான் காந்தியைக் கொண்டாடுகிறோம். காந்தி தமிழர் என்பதற்காக அல்ல. அவர் தமிழரே அல்ல.

### ஜனாப் ஜின்னா

ஜனாப் ஜின்னாவைச் சொல்கிறீர்கள்! ஜனாப் ஜின்னாவின் புனிதமான பெயரை உச்சரிக்கக்கூட உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா? அவர் காட்டிய வழியில் நீங்கள் நடக்கிறீர்கள் என்று என் முஸ்லிம் நண்பர்களே நீங்கள் சொல்லமுடியுமா? சொல்ல உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா? மனச்சாட்சியைத் தட்டிப் பதில் சொல்லுங்கள்.

இந்திய சுதந்திரத்துக்காக உழைத்தார் ஜனாப் ஜின்னா. இடையில் சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை என்னவாயிருக்குமோ என்ற ஐயத்தில் தன் முழு மூச்சோடும் போரிட்டு முஸ்லிம்களுக்கென்று தனியரசை ஏற்படுத்திக்கொடுத்த மகா வீரர் அவர்.

அந்தப் புனித தியாகியின் பெயரை வாயால் உச்சரித்துக்கொண்டு 'ஐக்கிய இலங்கை' கோரும் என் நண்பர்களே! உங்களைக் கேட்கிறேன். ஐக்கிய இலங்கையில் முஸ்லிம்களின் நிலை என்னவாயிருக்கும் என்று நீங்கள் எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? ஜனாப் ஜின்னா அவர்களை நீங்கள் மனதிலே கௌரவிப்பதாக இருந்தால் அவர் காட்டிய வழியைப் பின்பற்றுங்கள். சிறுபான்மையினருக்கு என்று பூமி சாத்திரப் படத்திலே இல்லாதிருந்த மாபெரும் இராச்சியத்தைச் சிருஷ்டித்த அந்தத் தியாகியைப் போல நீங்களும் நானும் இந்நாட்டுச் சிறுபான்மையினருக்கு ஓர் இராச்சியத்தையே ஸ்தாபித்துக்கொள்வோம். வருகிறீர்களா?

அப்படி வராதிருப்பின் ஜனாப் ஜின்னாவின் புனிதமான பெயரையே உச்சரிக்க வேண்டாம்.

### இனப் பிளவு ஆபத்தானது

கடைசியாக ஒரு வார்த்தை! இன்றைக்கு நம் தொகுதி இருக்கும் நிலையில் தமிழர்களும் முஸ்லிம்களும் எந்த வழியிலாவது பிளவுபட்டால் நமது தொகுதி அடுத்த தடவை ஓர் சிங்களத் தொகுதியாகிவிடும் என்று எச்சரிக்கிறேன். ஓர் ஆசிரியர் 'அப்படியானாலும் காரியமில்லை' என்றார் என்னிடம். அந்த ஆசிரியருக்கும், அவரைப்போன்ற மற்றவர்கட்கும் நான் சொல்லுகிறேன்: இரண்டு மூன்று ஆசிரியர்களின் உத்தியோக உயர்வுக்கும் மாற்றத்திற்குமாக இத்தொகுதியிலுள்ள முஸ்லிம் தமிழ்ப் பொது மக்கள் இத்தொகுதியைச் சிங்களத் தொகுதியாக்கி விடமாட்டார்கள். உங்களின் அபத்தப் புழுகுகளும் அவர்களிடத்தில் செல்லுபடியாகிவிட முடியாது!

### ஆசிரியர் சங்கக் கூட்டம்

வெலிகம அரசினர் கனிஷ்ட பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 12-1-57-ல் சங்கத் தலைவர் ஏ. எச். எம். வெபா தலைமை ஆசிரியர் தலைமையில் கூடியது.

பின்வரும் ஆசிரியர்கள் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ஏ. எச். எம். வெபா, காரியதரிசி: என். எம். எம். சுபியான் உபகாரியதரிசி: ஏ. ஐ. எம். மஹ்றூப், கலைக்கூடப் பொறுப்பாசிரியர்: பீ. எம். எம். நயீம், விளையாட்டுப் பகுதிப் பொறுப்பாசிரியர்கள்: ரீ. கதிர்காமநாதர், ஜே. எம். இஸட். மௌலானா, எஸ். எப். ஏ. ஹாமீன், மாணவர் சங்கப் பொறுப்பாசிரியர்கள்: ஏ. என். எம். ஹாசிம், எம். ஐ. எம். ஏ. ஜெலீல், 'அந்நூர்' பத்திரிகைப் பொறுப்பாசிரியர்கள்: எஸ். சந்திரசேகரி, எம். எச். எம். ஹஸன், எஸ். குமாரசாமி, வாசிகசாலைப் பொறுப்பாசிரியர்கள்: பீ. எம். எம். நயீம், எம். வீ. எம். ஸாலிஹா.



டேப் அடிப்பதிலும், ஏட்டிக்குப் போட்டியாகப் பாட்டுப் பாடுவதிலும் எம். ஜி. ஆரிடம் தோல்விகண்ட என். எஸ். கே. தனது பாதிமீசையைச் சிரைத்து விட்டு தோல்வியை ஒப்புக்கொள்ளும் ஹாஸ்யக் காட்சி. இக்காட்சியை "சக்கரவர்த்தி திருமகளில்" காணலாம்.

பட விமர்சனம்:

## சக்கரவர்த்தி திருமகள்


காதலும் வீரமும் களிநடம் புரிந்த கன்னித் தமிழ் நாட்டைக் கண்முன் நிறுத்தும் பாங்கில் ஆர். எம். இராமநாதன் இப் படத்தை தயாரித்தார் போலும்!

எம். ஜி. ராமச்சந்திரனும், பி. எஸ். வீரப்பாவும் சந்திக்கிறார்களென்றால் சண்டை கையால், காலால், கத்தியால், வாளால், கோவால், வாயால் எல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கலாமல்லவா! இதில் ஏமாற்றம் இல்லை.

அஞ்சலிதேவியும் எம். வரலட்சுமியும் காதல் கட்டங்களில் சக்கைபோடு போடுகிறார்கள்.

கிருஷ்ணன்—மதுரம், தங்கவேலு, முத்துலட்சுமி ஆகியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள். அப்படியானால் நகைச்சுவை உண்டா இல்லையா என்ற கேள்விக்கே இடமிருக்காதல்லவா! நகைச் சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன் படம் பார்ப்பவர்களை ஹாஸ்யக் கடலுக்கு அழைத்துச் செல்கிறார் என்றால் தங்கவேலு அவரையும் அதில் மூழ்கடித்து விடுகிறார் என்றே சொல்ல வேண்டும்.

சக்கரவர்த்தித் திருமகளில் யார் நடிப்பையும் சோடை சொல்ல முடியாது. பி. ஏ. குமாரின் கதை பழைய கதைகளின் கூட்டுச் சேர்க்கை. எனினும் டைரக்டர் நீலகண்டன் தன் திறமையால் அந்த உண்மையை ஓரளவு மறைத்துப் பார்ப்பவர்களைப் படத்தின் குணமான அம்சங்களில் கவனம் செலுத்த வைத்திருக்கிறார். வசன கதை இளங்கோவன் எழுதியிருக்கிறார். ஆனால் 'கண்ணகி' வசனம் எழுதிய இளங்கோவனைச் சக்கரவர்த்தித் திருமகளில் காண முடியவில்லை. ஈ. வி. சரோஜா, ராகினி, சகுந்தலா ஆகியோரின் நடனத்தை ரசிக்கலாம். பாடல்கள் அனேகமாக நல்லவை. ... டுகளில் அமைந்திருந்த ... செவிக்கு இனிமையாக இருக்கின்றன.



மாதர் குல மாணிக்கத்தின் இறுதிக் காட்சி இப்படி இன்பமயமாக அமைந்திருக்கிறது. இதிலிருந்தே படத்தில் சோகம் எந்த மட்டில் இருக்கும் என்பதை ஓரளவுக்கு அறிந்துகொள்ளலாம். பிரதான பாகங்களைத் தாங்கி நடிக்கும் நாகேஸ்வரராவ், ஜெமினிகணேசன், ரங்கராவ், தங்கவேலு, சாரங்கபாணி, அஞ்சலிதேவி, சாவித்திரி, கண்ணாம்பா, ராஜம் ஆகியவர்கள் அனைவரும் இக்காட்சியிலே தோன்றுகிறார்கள்.

பட விமர்சனம்:

## மாதர்குல மாணிக்கம்

பெண்ணினத்தைக் கவனத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்ட எந்தப்படமும் ரசிகர்களின் ஆதரவைப் பெறுமலில்லை. பிரகஷ்ராவ் டைரக்ட் செய்ய, சங்கர ரெட்டி தயாரித்த மாதர்குல மாணிக்கமும் மங்கையரின் ஆதரவை அமோகமாய்ப் பெறும் என்பதில் ஐயமில்லை.

மாதரிலே மாணிக்கம் என்று சொல்லக்கூடிய பெண் எப்படி இருக்கவேண்டும் என்பதை அஞ்சலிதேவி தனது முழுமையான சச்சிதமான நடிப்பால் விளக்கிக் காட்டுகிறார். கருத்து இக்காலத்துக்கு ஏற்றதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க நடிப்பை எடுத்துக்கொண்டால் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்படத்தில் நாகேஸ்வரராவ் குறைவாகப் பேசக் குணமாக நடித்துத் தான் ஒரு திறமான நடிகன் என்பதை ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார். ரங்காராவும் அப்படியே. தங்கவேலு, ராஜம், சாரங்கபாணி, பிரண்ட் ராமசாமி ஆகியோர் ஹாஸ்யமிருந்தளித்துப் படம் பார்ப்பவர்கள் சோகத்தால் தாழாமலிருக்கத் துணை செய்கிறார்கள். கண்ணாம்பாவுக்குத் தன் திறமைகாட்டத் தவாறு நடிக்க இப்படத்தில் சந்தர்ப்பம் தரப்படவில்லை. ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரின் நடிப்பும் சுமாராயிருக்கிறது.

கமலாவின் நடனம் ஜோர். ஆனால் அவர் பேசும் இரண்டொரு வார்த்தைகள் கேட்கச் சகிக்கவில்லை. ராகினி ரீட்டாவின் நடனமும் பரவாயில்லை.

பாடல்களும் கேட்டு ரசிக்கக்கூடியன. கதையமைப்பில் சில கோளாறுகள் இருந்தபோதிலும் ஸ்ரீதரின் கச்சிதமான வசனங்கள் அந்தக் குறைபாட்டை ஓரளவுக்கு மறைத்து விடுகின்றன. டைரக்டர் பிரகஷ்ராவின் முயற்சி வீண்போகவில்லை. மூன்றுமணி நேரம் படத்தில் காணப்படும் செட்டிங் மிக அற்புதம்.

காதல் வீரம் ஹாஸ்யம் இதில் எது வேண்டுமானாலும் சக்கரவர்த்தித் திருமகளில் அனுபவிக்கலாம். இப்படம் சிலோன் என்டர்பிரைஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் திரையிடப் படுகிறது.

சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்க விரும்புபவர்கள் அதிலும் குறிப்பாகப் பெண்கள் மாதர்குல மாணிக்கத்தைத் தவறாமல் பார்ப்பார்கள். இப்படம் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் விரைவில் திரையிடப்படவிருக்கிறது.

## அன்புத்தோழி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

'இந்தப் பெண் யார் தெரியுமா? ஜீன் நிக்கலஸ் பேபேத் என்பது இவள்தான் 1879-ல் கற்புக்குப் பங்கம் விளைவித்த காரணத்திற்காக இவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அதற்குத் தப்பித்தான் இவள் வந்திருக்கிறாள். இதுவரையில் நாங்கள் இவளைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறோம்" தான் நகைப்புடன் கேட்டுக்கொண்டிருந்தேனே தவிர அதை நம்பவில்லை.

"இவளது வலது காதில் பச்சை குத்திய அடையாளம் இருக்கும். அதைப் பார்த்த பின்னாவது நம்புங்கள்!" என்று துணியைக் கிழித்துக் காட்டினாள். அவர் கூறியபடி அந்த அடையாளம் இருக்கத்தான் செய்தது "வேண்டுமானால் இவள் ஆண்தான் என்பதை இப்பொழுதே காட்டி விடுகிறோம் என்று எனது வேலைக்காரியை, இல்லை எனது வேலைக்காரனை ரோனை இழுத்துப் போனார்கள்.

★

நான் கூறிய இவற்றை நீ நம்புவாய் என்றே நினைக்கிறேன். இதை அறிந்தபின் எனக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. அவன் என்னை ஏமாற்றியதை நினைக்கச் சிரிப்பாய் இருந்தாலும், எனது உடைகளை மாற்றிய அவனை — என்னைத் தொட்டுப் பழகிய அவனை என்னால் நினைக்காமல் இருக்க முடியுமா? சிந்தித்துப்பார்! கற்பழித்த இளம் வாலிபனையும், கற்பழிக்கப்பட்ட பெண்ணையும் நினைக்கும் பொழுது எனக்கு...... எனக்கு......காரணத்தை இப்பொழுது நீ உணர்ந்து கொண்டாயா?"

மார்கோத் இதற்குப் பதில் அளிக்கவில்லை. வண்டிக்காரன் அணிந்திருந்த உடையிலுள்ள பித்தானைப் பார்த்துவிட்டு, பெண்கள் சில நேரங்களில் சிரிப்பார்களே அசட்டுச் சிரிப்பு! அப்படிச் சிரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவிஞன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ிக் கவிஞர். கடவுள் கடவுள் என்று எந்நேரமும் கத்திக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து, "கடவுள் செல்வர் என்ற தொல்லை கடவுள் பேர் இழைத்ததே" என்று அஞ்சாமல் சுட்டிக் காட்டுகின்றார். சமூகத்திற்கு அநீதி விளைவிக்கின்ற கொடியவர்களுக்கு வர மக்களைப் பார்த்து, "கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" என்று குமுறுகின்றார். தமிழரைப் பழிப்பவர்கட்கு 'பொங்குந் தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு' என்று ஆழுகின்றார். ஏழைகளை வாட்டி வயிறு வளர்க்கும் கள்ள வியாபாரிகளைப் பார்த்து, 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பராய் விடுவார் உணரப்பா நீ" என்று வீறு கொண்டுரைக்கின்றார். என் மொழி தமிழ் என்று கூற நாணுபவரைப் பார்த்து "தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்" என்றும், "நானும் தமிழும் மெய்யாய் உடல் உயிர் கண்டீர்" என்றும் நெஞ்சை நிமிர்த்தி அஞ்சாது கூறுகிறார். இராவணன் துட்டன் என்றும், அவன் தமிழனல்ல என்றும் மூலையிலிருந்து பேசுபவரைப் பார்த்து, "என் தமிழர் மூதாதை இராவணன் தான் அவன் நம்மை இவ்வுலகம் அறியும்" என்று உறுதியிட்டுரைக்கின்றார். தமிழரையும், தமிழையும், தமிழகத்தையும் பிறர் ஏளனம் செய்தும், கெடுதிகள் புரிந்தும் வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கும் தமிழரைப் பார்த்து "வந்தார்க்கோ நாமடிமை வந்தார் பொருள் விற்கும் சந்தையா நமநாடு? தாயார் தமிழிருக்க இந்தியோ கட்டாயம்?" என்று உணர்ச்சி பெருகக் கேட்கின்றார். இத் தமிழர்களிடம் "கள்ளத்தால் நெருங்கொணுதே எனவையம் கலங்கக்கண்டு துள்ளும் நாள் எந்நாள்?" என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் புரட்சிக்கவிஞரின் புரட்சிகளை இவேலசில் எழுதவோ? சொல்லவோ? முடியாது.

இன்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசனைப் பற்றி ஏதாவது தெரியுமா? என்றோர் வினா இளம் மாணவர் பரீட்சையுலகில் கேட்கப்படுமாயின் அத்தனைபேரும் உத்தமமான பதில் கொடுத்துச் சித்தி பெறுவர் என்பது திண்ணம். அவ்வளவு தூரத்துக்குத் தமிழர்களின் இதயத்தில் புரட்சிக் கவிஞர் இடம் பெற்று விட்டார். பாரதிதாசனை இழிவாய்ப் பேசுவோரின் பேச்சைக் கேட்டால் இளைஞர் உலகம் இரத்தம் கொதிக்க எழுந்து நிற்கும். இனிப் புரட்சிக் கவிஞனைப்பற்றி வேறு என்ன சொல்வது?

## அட...! அடபாவி!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகுத்தில் நிலை குலையச் செய்தார் பயில்வான். நிலைகுலைந்தவனே வீதி ஓரத்தில் போய் விழுந்தான். நிலை குலைந்தவனை நையப்புடைக்கப்பட்டவனே தன்னை சுவாதீனப் படுத்திக்கொண்டு பயில்வானைப் பார்த்து.

ஐயா! நல்ல சமயத்தில் என்னைக் காப்பாற்றினீர்கள் இல்லாவிட்டால் இவரிடம் உதைபட்டது மல்லாமல் பொலிஸ் ஸ்டேஷனிலும் உதைபட வேண்டும். என்றான் அவன்.

ஏன் பொலிசுக்குப் போக வேண்டும். என்றார் பயில்வான்.

நான் இவரிடமிருந்த பணத்தைப் பிக்பாக்கட் அடித்து விட்டேன். அதனைத்தான் என்னை உதைத்தார். ஆனால் தெய்வம் போல் நீங்கள் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். ஆகவே நான் களவெடுத்த பணத்தில் பாதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றான். அவன்.

அட ...! அடபாவி! என்றார் பயில்வான். —"உதயகுமார்"

## மட்டக்களப்பிலே ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பில், கொஞ்சமும் உற்சாகம் குறையாமல் நடைபெற்று வருவதற்குக் காரணம், பல அனுபவசாலிகளும் அன்பர்களும் இயக்கத்தின் பால் காட்டிவரும் பேராதரவுதான்! திருவாளர்கள் செ. இராசதுரை, எம். பி. எம். மாணிக்கம், எஸ். எம். இராசமாணிக்கம், ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம், சி. எஸ். பூபாலரத்தினம், டபிள்யூ. உலகேசரம், கே. வி. எம். மாணிக்கவாசகர், கு. சரவணமுத்து ஆகியோருடன் இன்னும் ஏராளமான அன்பர்கள் தங்கள் நேரம், பணம், செல்வாக்கு எல்லாவற்றையுமே, 'சிறீ' எதிர்ப்பு இயக்க வெற்றிக்காகப் பயன்படுத்தி வருகின்றார்கள்! இவர்கள் செய்துவரும் பணியை மக்கள் மதித்துப் பாராட்டுகின்றார்கள்!

திரு. மு. மாணிக்கம் தமது சர்க்கார் பதவியை ராஜினாமாச் செய்யவும் செய்தார். உடன் எதிர்ப்புப் போராட்டத்தில் குதித்துவிட்டாரே!

தமிழர்கள் எந்த எந்த நிலையிலிருந்தாலும், தமிழரின் உரிமைக்காக-விடுதலைக்காக ஏதாவது ஒரு தியாகத்தைச் செய்ய முன் வந்தால் அதுவே போதுமானதல்லவா?

# முக்கிய அறிவிப்பு

அநேக போட்டி நேயர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி இல. 35ன் முடிவு திகதியை 20-2-57 லிருந்து 27-2-57 வரை நீடித்துள்ளோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 33, 34 (கிறிஸ்தோதய-தைப் பொங்கல் திட்டம்) இவற்றில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுத் தொகைகள் 15-2-57 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டி ஆசிரியர்.


ஜெமினி ட்டி ரெக்ஸி

எம். வி. ராஜம்மா-நரசிம்மபாரதி,

ஜமுனா-கிருஷ்ணன்-மதுரம்,

ஈ. வி. சரோஜா-குசலகுமாரி

நடிக்கும்

குடும்ப விளக்கு





இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) போகம்பரை (கண்டி)

ஸ்டார் (பதுளை) ப்ரீமியர் (ஹட்டன்)

தினசரி பி. ப. 2, மாலை 6, இரவு 9-30 மணிக்கும்
ஞாயிற்றுக்கிழமை காலைக் காட்சி 10 மணிக்கும்

தென்னகத்தின் தெவிட்டாத நடிப்பு மன்னன்

எம். ஜி. ராமச்சந்திரன்

நடிக்கும்

சக்கரவர்த்தி திருமகள்

காதலும் வீரமும் களிநடம் புரிந்த கன்னித் தமிழ் நாட்டைக் கண்முன் நிறுத்தும் கருத்தோவியம்

மற்றும்

அஞ்சலிதேவி,
பி. எஸ். வீரப்பா,
தங்கவேலு,
சுசீலா,
ஆர். பால சுப்பிரமணியம்,
என். எஸ். கிருஷ்ணன்,
டி. ஏ. மதுரம்
நடித்தது.

முன் கூட்டியே இடத்திற்குப் பதிவு செய்து





கொழும்பில் 5 வது வாரம்!

சிவாஜி கணேசன், பானுமதி,
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்
நடித்த

ரங்கோன் ராதா

முருகன் (ஜிந்துப்பிட்டி) ஸெனட்ரல் (பருத்தித்துறை) ஸென்ட்ரல் (நாவலப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-10 பகற்காட்சிகள் சனி பி. ப. 2 மணி
ஞாயிறு காலை 10 மணி.

அஜந்தா (மட்டக்களப்பு) தினசரி மாலை 6 ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
# சுதந்திரன் மாணவர் மன்றம்

## தபசியும் எலியும்

முன்பு ஒரு காலத்திலே, கௌதமர் ஆரணியத்தில் ஒரு முனி சிரேஷ்டர் இருந்தார். ஒரு நாள் அவருடைய ஆச்சிரமத்துக்கருகாமையில் காகத்தின் வாயிலிருந்து ஒரு எலிக்குஞ்சு கீழே விழுவதைக்கண்ட, கருணையுள்ளம் படைத்த அத்தபசி தானியக்குறுணிகளால் அதைப் போஷித்து வளர்த்தார். அந்த எலியைப், பூனை துரத்துவதைக்கண்ட முனிவர் தன்னுடைய சிறந்த வல்லமையால், அதனைப் பூனையாக்கினார். அந்தப் பூனை நாய்க்குப் பயந்ததால் அதை ஒரு நாயாக்கினார். அந்த நாய் புலிக்கு மிகவும் பயந்ததால் அதைப் புலியாக்கினார். அது புலியாகவிருந்தும், அவர் அதை ஓர் எலிக்குச் சமமாகவே மதித்தார். "முனிவர் ஒருவர் ஒரு எலியை இந்தப் புலியாக்கினார்" என்று அப்புலியைப் பார்த்த அங்கு குழுமிநின்ற சனங்கள் சொன்னார்கள். இதைக் கேட்ட அந்தப் புலி துயரத்தோடு "இம்முனிவர் உயிருள்ளவரையில் என்னை அவமானத்துக்குள்ளாக்கும் இக்கதையோ மறையாது" என்று யோசித்து அத் தபசியைக் கொல்லும் உத்தேசத்துடன் அவரை விரைந்து சமீபித்தது. ஞானதிருஷ்டியின் மூலம் அதனுடையகருத்தை உணர்ந்த முனிவரால் "நீ எலியாகக்கடவாய்" என்று சொல்லியவுடனே, அந்தப் புலி பழைய எலியாக மாற்றப்பட்டது. அதனால் நான் சொல்லுகிறேன்! — புலியின் தன்மையை அடைந்த எலி முனிவரைக் கொல்லச் சென்றதுபோல, உயர்ந்த பதவியை அடைந்த அற்பபுத்தியுள்ள மனிதன், தன்னை அந்நிலைக்கு உயர்த்திய தன்னுடைய எஜமானைக் கொல்ல விரும்புகிறான்.

(சமஸ்கிருதகதை) — செல்வி சந்திரவதனு துரைராஜா
யற்தப்பலாவ

நிமிஷக் கதை:

## அட...! அடபாவி!

ஐயோ! என்னைக் கொல்லுகிறாரே காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!! என்று அலறினான் ஒருவன். அவனை இன்னொருவன் மொத்... மொத்தென்று நையப்புடைத்துக்கொண்டிருந்தான். அவ்வழியால் வந்துகொண்டிருந்த பயில்வான் இதைக் கண்டதும் அதிக கோபம் கொண்டான். ஓடிச் சென்று நையப்புடைத்தவனை இரண்

(13-ம் பக்கம் பார்க்க)

கட்டுரைப் போட்டி: இரண்டாவது பரிசு பெறும் கட்டுரை

## புரட்சிக் கவிஞன்

ஓ. சி. கிருஷ்ணன், கந்தகெதரை

விநாடிக்கு விநாடி, நிமிடத்துக்கு நிமிடம், தினத்துக்குத் தினம், திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு இவ்வுலகம் மாற்றமடைந்துகொண்டே போகிறது. எல்லாப் பொருட்களும் மாறியவண்ணமேயிருக்கின்றன. எதுவும் எக்காலமும்ஒரே நிலையில் இல்லை. இது இயற்கைநிகழ்ச்சிகள்



இயற்கைபுரட்சி செய்வதைபோலவே மக்களும் புரட்சி செய்கின்றார்கள். வெள்ளப்பெருக்கு வரும்போது அதற்கு ஓர் மணற்திடல் தடைசெய்தால் அதனை மீறி தகர்த்துப்பாய்கின்றது நீர். இது இயற்கைப் புரட்சி. இவ்வாறே சுதந்திரத்தை விழையும் மனமுள்ள மக்களும் தம் உரிமை வாழ்வுக்கோர் தடைவருவதைக் கண்டால் அதை மீறிப் புரட்சி செய்கிறார்கள். அரசியல், தொழில், வியாபாரம், கல்வி, கலைகள் யாவற்றிலும் புரட்சிகள் தோன்றவே செய்கின்றன. முதலிலே புரட்சி உதிக்குமிடம் மனம்தான். எண்ணத்தில் எழும் புரட்சி உணர்வுகளைச் சிலர் பேச்சு மூலம், சிலர் எழுத்துமூலம், சிலர் காவிய மூலமும், சிலர் ஓவியம் மூலமும், சிலர் சிற்பம் மூலமும் வெளியிடுகிறார்கள் பேச முடியாப் பிராணிகளோ செயல்மூலம் செய்து காட்டுகின்றன. புரட்சியைக் கவிமூலம் காட்டுபவனைப் புரட்சிக் கவிஞன் என்கின்றோம்!

எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தாரிடையேயும் எப்போதும் புரட்சிகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. ஆண் பெண், சிறியார் பெரியார் அனைவரிடத்திலும் புரட்சி தோன்றுகின்றது. இப்புரட்சிகளால் சமுதாயம் மாற்றமடைகின்றது. சிறிது சிறிதாய் முன்னேறுகின்றது. முதலில் பாட்டிலே நிகழும் புரட்சி, பின் நாட்டிலே நிகழ்ந்து மாற்றமெய்தி முன்னேறப் பல ஆண்டுகள் கூடப் பிடிக்கலாம்? இற்றைவரை பல புரட்சிக் கவிஞர்கள் பல இடங்களிலும் தோன்றிப் பல புரட்சிகள் செய்திருக்கிறார்கள். நம் தமிழகத்தை எடுத்துக்கொண்டால் சமீபகாலத்தில் பாரதியார் தோன்றிக் கவிதைப் புரட்சி மூலம் தூங்கிக்கிடந்த தமிழர்களை விழிக்கச் செய்தார். இன்றைய தமிழகத்திலே பாரதியாரிலும் ஒருபடி உயர்ந்து நின்று கவிதைப் புரட்சிகளால் நாட்டையும் மக்களையும் விழிக்கச்செய்து முன்னேறச் செய்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசனல்லால் வேறெவர்? இவ்விடத்தில் அவருடைய சரித்திரம் நமக்கு முக்கியமல்ல. அவர் தம் புரட்சிகள் யாவை? அவை எப்படியானவை? என்பவற்றையே ஆராயவேண்டியிருக்கின்றது

பல புராணப் புழுகு நூல்களைக்கற்று அப்படியே மெய்யென நம்பி வாழும் மக்களைப்பார்த்து, "உள்ளப் பகுத்தறிவுக்கொவ்வாத ஏடுகளால் என்னை அசைக்க இயலாது" என்று திட்டமாய்க் கூறுகிறார் நம் புரட்

(13-ம் பக்கம் பார்க்க)

## "மறியற்காரன்"

உலகத்திலே நான் ஏன் மனிதனாகப் பிறந்தேன்? எனக்குத் தொழில் தெரியாமலா, கற்கத் தெரியாமலா இக்காரிருளிலே சிக்கியிருக்க வேண்டும். தியோனுக்குத் தீமை செய்து நாட்டைச் சீர்திருத்த முடியாதா? நாடெங்கும் தொழிற் கல்வி பரவவேண்டும், ஒவ்வொரு வாலிபனும் பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டும் அதிலே நானும் சேர்ந்து சேவை செய்ய வேண்டும் என்று எண்ணினேன், செய்ய முடிந்ததா?

மனித தத்துவத்திற்கு நிலைக்களனாக அமைந்து இன்று மிருக வாழ்வு நடத்துவோருக்குத் தகுந்தபாடம் கற்பித்துக் கொடுக்கவேண்டும் என்று என்மனதிலே ரீங்காரம் செய்தது. வாழ்விலே ஒருநாள் தான் கூடினேம், "வாழ வந்தாரா"? என்ற இவ்வன்நெஞ்சக்காரனால் பிரிக்கப்பட்டேன். என் குடும்பம் ஏழ்மையுடன் தோழமை பூண்டு வாழுகின்ற இத்தருணத்திலேயே இந்த நிந்தனை. இளமையின் அடிவானத்திலே வாலிபத்தின் துடிப்பிலே எத்தனை புனிதமான கற்பனைகளால் என் எதிர்காலத்தை அழகு செய்ய எண்ணினேன்.

நான் ஓர் மனிதன். உணர்ச்சியற்ற மரக்கட்டையல்ல. சுவர்க்கம் எங்கே இருக்கின்றதென்று நம்பமுடியவில்லை. சுவைக்க வேண்டியவற்றை இங்கேயே சுவைக்க வேண்டியபடியால் சுவைக்காமல் முடியுமா? ஏழைகள் என்றும் கோழைகளாக வாழ முடியுமா? கொலைகாரன் என்ற பதக்கம் இக்கொடியபாரியிலே விழுந்தாலும் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த அனிச்சை ...... காலத்திலே இனியவர்கள் யாவரும் என்னை விட்டு அகன்று விட்டனர். அவமானம்! அவமானம்!

உண்மையாக வாழவந்த எனக்கா இந்தக் கொடுமை. அநீதியாக வந்தவன் இதோ என் கண்முன்னே மனைவி மக்களுடன் இ புற்று இல் வாழ்க்கை நடத்துகின்றான். பணக்காரனென்றால் ஏழைப் பெண்ணின் வாழ்வை வரண்ட பாலைவனமாக மாற்றிவிட்டான். நல்லை நீட்டிப் பநாடினேன், அது நயவஞ்சகம் செய்துவிட்டது. நீதி கோரிய எனக்கு நிந்தனை. எனது பணத்திலே உண்டு வளர்ந்தவன் எனக்கே துரோகம் செய்துவிட்டான்.

ஆம் இதோ! மரணத்தருவாயில் நின்று மனமாறக் கூறுகின்றேன். பச்சாதாபமின்றிப் பரதவிக்கும் இந்த ஏழையின் துயரத்தைப் போக்காமல் கண்குளிரக் கண்டு கொண்டிருக்கும் சமுதாயமே கேள்!

வழக்கு மன்றம் அநீதியின் பக்கம் நிற்கும் அரண்மனை. கொலைகாரன் என்ற பதக்கத்தை மாலையாக இட்டுக்கொண்டேன். பணக்காரரின் விளையாட்டுப் பொம்மை அம்மன்றம். ஏழைகளுக்கு ஓரஞ் செய்யும் வஞ்சகக் கருவி. அங்கு கூறப்படும் சட்டமே சிலந்திவலை. ஆம் சிறுபூச்சிகளாகிய எங்களைப் போன்றவர்களைத்தான் சிக்க வைக்க முடியும். உலகமே உருண்டை என்றவனுக்கு மரணம், அறிவாளிக்கோ அது விஷக் கோப்பை. மூடமதிகொண்ட கேடயர் சமுதாயத்தால் எனக்கு வேறென்ன பரிசு அளிக்க முடியும்.

அருமைத் தாயகமே நீ ஆந்தைக் குகையிலிருந்து அருணோதயம் நோக்கிச் செல்லுவதெப்போ! வானம்பாடியாக வாழ்வது எப்போ!

— செல்வி எஸ். உம்மல்பிரே, கொழும்பு

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக் குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால்பெட்டி இல 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6

பெயர்..........................................

பாடசாலை......................................

விலாசம்........................................

..........................................

.............................. ..............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

1125 எம் எம். தாஹீர், கொழும்பு-12.
1126 சி ஆனந்தர், இணுவில் கிழக்கு.
1127 எம். எச். எம். ஹலீம்தீன், தர்க்காநகர்,
1128 த. இ. சாந்தகுமார், நிலாவெளி
1129 ஞா. சாமித்தம்பி, நாய்ப்பட்டிமுனை.
1130 ம. சத்தியலெட்சுமி, மண்டூர்.
1131 இ. மங்களேஸ்வரி, மட்டக்களப்பு.
1132 சா. தியாகராஜா, காரைதீவு.
1133 கிருஷ்ணபிள்ளை, சந்திவெளி.
1134 க. சோதீஸ்வரன், காரைதீவு.
1135 இ. கமலநாதன், மட்டக்களப்பு.
1136 கே. வடிவேல் அட்டாளைச்சேனை.
1137 க. பாலசேகரம், தெல்லிப்பளை.
1138 ஆ. பொன்னையா, அல்வாய் மேற்கு.
1139 ஏ. ஏ. எம். புவாஜி, மாத்தளை.
1140 எஸ். புஷ்பமாலை, கல்முனை.
1141 செல்வி. வே. மீனலோசனி, கிரிலப்பனை.
1142 செல்வி. மேரி பெர்னடேற், கொழும்பு-9.
1143 து. விமலசேகரம், திருகோணமலை.
1144 க. செல்வநாயகம், மாதகல்.
1145 நா. சிவானந்தசோதி, ஊர்காவற்றுறை.
1146 செ. ஆனமுகன், தங்கோடை.
1147 இ. குணபாலசிங்கம், செருக்கைப்புலம்.
1148 எச். ஏ வாகித், உக்குருவிபிட்டிய.
1149 க. புண்ணியமூர்த்தி, பெரிய நீலாவணை.
1150 வெ. சோதிமகான், மனினார்.
1151 டி. கே. கந்தையா, மத்திய கல்லாறு.
1152 ஜே. சி. கந்தையா, பெரிய கல்லாறு.
1153 செல்வி. இ. விஜயகுமாரி, சக்காலை.
1154 பொ. கிருஷ்ணன், மாத்தளை.
1155 செல்வி. கு. மீனாட்சி, உரும்பராய்கிழக்கு
1156 க. ரவீந்திரன், கொழும்பு-13.
1157 க. நவசோதி, கொழும்பு-13.
1158 க. கனகேஸ்வரன், கொழும்பு-13.
1159 க. வசந்தகுமாரன், கொழும்பு-13.
1160 செல்வி. க. சசிவரி, கொழும்பு-13.
1161 பொ. அன்புமலர், காரைநகர்.
1162. ஆ அதிருபசிங்கம், தொண்டைமானாறு.
1163 எஸ். எம். பீ. சாகுல் ஹமீது, மாத்தளை.
1164 நா. கோபாலநாதன், நீராவியடி.
1165 மு. அப்துல் சமீது, பெரியநிண்ணியா.
1166 ஆ. ச. பற்குணராசா, கொக்குவில் கிழக்கு
1167 கே. எம். ஹஸன், பொத்துவில்
1168 எஸ். எம். ஏ. ஹஸன், கேகாலை.
1169 தா. பத்மாசனி, தாவடி.
1170 சரு. சொக்கலிங்கம், தந்திரியா.
1171 மி. அலக்சாண்டர், மட்டக்களப்பு.
1172 ஆ. வின்சன் துரைராஜா, கல்பொல்லை.
1173 செல்வி. க. அ. இந்னேஷியா, மட்டக்களப்பு.
1174 ச. பேராநந்தன், யாழ்ப்பாணம்.
1175 கி. சிவேந்திரா, வட்டு மேற்கு.
1176 செல்வி. க. மனோன்மணி, திருகோணமலை.
1177 ஆ. த. ஆசைநாயகம், பருத்தித்துறை.
1178 சா. ஒ. வெயாநந்தம், பெரியகல்லாறு.
1179 க. அ. செல்வநாயகம், மாத்தறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியுரிமைப் போராட்டத்தில் குதித்த மாணவர்கள்

## ஏருவூர் சிரேஷ்ட பாடசாலையில் 482 பேர் "வேலை நிறுத்தம்"

## சிங்கள வகுப்பை நிறுத்தும் வரை

### பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து நடத்த முடிவு

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஏருவூர் சிரேஷ்ட பாடசாலையைச் சேர்ந்த 482 மாணவர்கள் பாடசாலைக்குப் போகாமல் பகிஷ்கரித்து "வேலை நிறுத்தம்" செய்திருக்கிறார்கள். பாடசாலையில் சிங்கள ஆசிரியரை நியமிக்கக் கூடாதென்பதும், சிங்களம் படிப்பிக்கக் கூடாதென்பதுமே "வேலை நிறுத்த"த்திற்குக் காரணமாகும். இந்த நிலை கடந்த இரண்டு வாரங்களாக நீடித்து வருகிறது.

ஏருவூர் சிரேஷ்ட பாடசாலையில் மொத்தம் 640 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களில் 332 தமிழ்ப் பிள்ளைகள். 308 முஸ்லிம் பிள்ளைகள். தமிழ்ப் பிள்ளைகள் அதிகப்படியாக இருந்தும் இப்பாடசாலையை அரசாங்கம் ஒரு முஸ்லிம் பாடசாலையாக மதித்து அங்கு ஒரு சிங்கள ஆசிரியரை அனுப்பியிருக்கிறது.

இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு எஸ். தம்பிராசா என்னும் தமிழர். இவர் தமிழுணர்ச்சி அற்றவராக அரசாங்கத்திற்கு வால்பிடிக்கும் வகையில் அப்பாடசாலையில் சிங்களத்தைத் திணிக்க முன்வந்திருக்கிறார். இந்த இழிசெயலை எதிர்த்தே மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்திருக்கின்றனர்.

மொத்தமாயுள்ள 640 மாணவர்களில் 332 தமிழ் மாணவர்களும், 150 முஸ்லிம் மாணவர்களும் மொத்தம் 482 மாணவர்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்திருக்கின்றனர். 153 முஸ்லிம் மாணவர்கள் மட்டும் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை இவ்விஷயத்தில் தலையிட்டு சிங்கள வகுப்பை நிறுத்தும்படியும், சிங்கள ஆசிரியரைத் திருப்பி அனுப்பும்படியும் கேட்டிருக்கிறார். இதுவரை ஒரு முடிவுமில்லை. எனவே "வேலை நிறுத்தம்" தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெறுகிறது.

இப்பாடசாலையில் 15 தமிழ் ஆசிரியர்களும் 3 முஸ்லிம் ஆசிரியர்களும், 1 சிங்கள ஆசிரியரும் கடமையாற்றுகின்றனர்.

---

### அருந்ததியர் இளைஞர் கலை மன்றம்

அருந்ததியர் இளைஞர் மன்றத்தின் அங்கத்தவர் பொதுக்கூட்டம் சென்ற 3—2—57-ல் மன்ற உபதலைவர் திரு செ. மு. சுப்பையா தலைமையில் டிமன்ற பணிமனையில் நடைபெற்றது.

அவ்வமயம் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவரும், முன்னாள் இந்திய சட்ட மந்திரியுமான டாக்டர் அம்பேத்காரின் அகால மரணத்துக்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

2. மருதானை அரசினர் பாடசாலையில் தமிழர்—முஸ்லிம் சம்பந்தமாக ஏற்பட்ட சச்சரவை முன்னிட்டு கூட்டிய மாநாட்டில் தமிழ் பள்ளிக்கூடங்களில் தோட்டிகள் அதாவது தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் படிக்கின்றமையால் எமது சோனகப் பிள்ளைகள் படிப்பது எங்கட்கு விருப்பமில்லை என்று கூறிய சர் ராஸீக்பரீத்தின் போக்கை இக்கூட்டம் கண்டிக்கிறது.

---

### காந்திஜீயின் அமரதினவிழா

மகாத்மாகாந்தியின் 9வது அமரதினத்தைக் கொண்டாடும் நோக்கமாகக் கடந்த 30-1-57 முந்தல் கனகாம்பிகை மண்டபத்தில் இலங்கைச்சர்வகலாசாலை வைத்தியப்பகுதி விரிவுரையாளர் டாக்டர் ஏ. சின்னத்தம்பி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பாடசாலைத்தலைமை ஆசிரியர் பண்டிதர் மா. மாணிக்கம் பேச்சாளர்களை வரவேற்றுப் பேசினார். அடுத்து டாக்டர் எம். வேதாரணியம், திரு பி. எஸ். பெர்னாண்டோ, ஆசிரியர் திரு வி. எஸ். பிள்ளை, ஆசிரியர் திரு கே. சோமசுந்தரம் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

---

### மகாத்மா காந்தியின் அமரதினம்

அண்ணல் மகாத்மா அவர்களது ஒன்பதாவது ஜயந்தி விழா தம்பலம் சிப்பித்திடல் காந்திஜீ சனசமூக நிலையத்தில் திரு வ. கதிரித்தம்பி ஆசிரியர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கிராமச்சங்க அங்கத்தவர் திரு வே. பொன்னுத்துரை திரு செ. சின்னராசா முதலியோர் பேசினார்கள் திரு கா. தங்கராசா நன்றியுரை கூறினார் திரு ச. காளியப்பு காந்திஜீயின் மீது பாடல்கள் பாடினார்.

---

### இளைஞர் முன்னேற்றக் கழகம்

பலாங்கொடை தமிழ் இளைஞர் கழகத்தின் அங்கத்தவர் கூட்டம் சென்ற 2-2-57-ல் புலத்கம ஐக்கிய பண்டகசாலைக்கு அருகாமையில் செல்வன் ச. முத்தையா தலைமையில் கூடியது. முறையே கழக அறிக்கை முதலியன செயலாளர் எம். முகநிலிங்கத்தினால் வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னர் "எழுதுகோலா? வீரவாளா? சிறந்தது" என்றதைபற்றி செல்வர்கள் ஏ. நவராஜ் என். ஆர். துரைராஜா ஆகியோர்கள் சொற்போர் நடத்தினார்கள். முடிவில் எழுதுகோல் சிறந்தது என்ற முடிவை [illegible] தார்கள் தெரிவித்தனர்.

---

### இயல் இசை நாடக மன்றம்

சென்ற 3-2-57 ஞாயிறு மாலை 2-30 மணியளவில் குப்பனித் தெரு "சாஹிரா கல்லூரி" மண்டபத்தில் "இயல் இசை நாடக மன்ற" ஆரம்ப விழா டாக்டர் கே. ஏ. சுந்தரம் தலைமையில் அதிவிமரிசையாக நடந்தேறியது.

மன்ற நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

திரு கலைதாசன் (தலைவர்) திரு எம். எஸ். குமார் (செயலாளர்) திரு வை. மு. அழகேசன் (நாடக பொறுப்பாளர்) ஜனாப் எம். எம் பாரூக் (பொருளாளர்) ஜனாப் என். எம். நூர்தீன் (விளம்பரச் செயலாளர்)

---

### மாதர் முன்னேற்றச் சங்கம்

துறைநீலாவணை மாதர் முன்னேற்றச் சங்கக் கூட்டம் கடந்த 3-2-57ல் சங்கத் தலைவியின் இல்லத்தில் கூடிற்று. கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களில் சங்க வளர்ச்சிக்காகப் பாடுபட்ட திருமதி எம். எஸ் கனகரெட்ணம், திருமதி எம். எஸ் காத்தமுத்து ஆகியோர் முறையே மீண்டும் நடப்பு வருடத் தலைவியாகவும், காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர். தனாதிகாரியாக திருமதி மாரிமுத்த, உபதலைவி திருமதி சின்னத்தங்கம், இணைக் காரியதரிசி திருமதி தெ. சாமித்தம்பி ஆகியோரும் 9 பேரைக்கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

---

### ஆசிரியருக்குப் பிரியாவிடை

சென்ற இரண்டு வருட காலமாக திஹாரி முஸ்லிம் பாடசாலையில் கடமையாற்றிய ஜனாப் ஏ. எச். எம். அமீன் 1—2—57 தொடக்கம் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு மாணவர் மன்றத்தால் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

---

### சன்மார்க்க இயக்கம்

தியாக சத்திய ஜீவ சன்மார்க்க இயக்கத்தின் பொதுக் கூட்டம் பொங்கற் புதநாளன்று இணுவில் சிவகாமசுந்தரி வாசிகசாலையில் திரு வை. தியாகராச சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

இதன் பின் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது: தலைவர்: திரு வை. தியாகராசா சுவாமிகள், காரியதரிசி: திரு த. கந்தையா ஆசிரியர், உதவிக் காரியதரிசி: திரு க. கந்தசுவாமி ஆசிரியர், தனாதிகாரி: திரு மு. குமாரசுவாமி, நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திரு ச. செல்வநாயகம் ஆசிரியர், திரு செ. நடராசா ஆசிரியர், திரு சு. பரமலிங்கம்.

---

### தெஹியோவிற்ற மாணவர் சங்கம்

தெஹியோவிற்ற வித்தியாலய தமிழ் மாணவர் சங்க 1957-ம் வருட முதற் கூட்டம் 1—2—57-ல் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு வி. கனகரெத்தினம் தலைமையின் கீழ் நடைபெற்றது பாடசாலையில் கொண்டாடவிருக்கும் எதிர்வரும் சுதந்திர தினத்தைத் தமிழ் மாணவர்கள் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## தொழிலாளர் நலனும் - சுபீட்சமும் தான் எனது வாழ்வு

### இருப்புக் கொல்லைத் தோட்டத்தில் திரு. தொண்டமான் முழக்கம்

"இரும்புக்கொல்லைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி, இங்கே குழுமியிருக்கும் சுமார் 5000 தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும் புதிய சகாப்தம் ஆரம்பமாகியிருக்கிறது. இப்புதிய சகாப்தமே ஏனைய தோட்டங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு தொழிலாளர்களின் எதிர்கால வாழ்வை உத்தேசித்து, உங்கள் வாழ்வின் அஸ்திவாரத்தைப் பலம் பொருந்திய வாழ்வாக அமைக்கவேண்டும்." தொழிலாளர்களது நலனும், சுபீட்சமும்தான் எனது வாழ்வு. அதுதான் எனக்கு சுவர்க்கம்"

இவ்வாறு இரும்புக்கொல்லைத் தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் திரு எஸ். தொண்டமான் பேசுகையில் கூறினார். இரும்புக்கொல்லைத் தோட்டத்திலிருந்து, சுமார் இரண்டு மைலுக்கப்பால் விருந்து அழகாக ஜோடிக்கப்பட்ட திறந்த காரில் திருவாளர்கள் கே. ராஜலிங்கம், எஸ். தொண்டமான் ஆகியவர்கள், கண்டிய நடனம், கரகம், சிலம்ப விளையாட்டு, மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

"உலக சரித்திரத்திலேயே மேற்கிந்திய நாட்டிலே லங்கேஷியா என்னும் நாட்டில் தான் 1836-ம் ஆண்டிலே 189 நாட்கள் தொடர்ந்து தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்தி வெற்றியடைந்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் இந்த இருபதாம நூற்றாண்டிலே இலங்கையில் அதுவும் கலகாபகுதியிலேயுள்ள இரும்புக்கொல்லைத் தோட்டத்திலேயுள்ள தொழிலாளர்கள் அகிம்சா முறையிலே காந்தி அடிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, அமைதியான போராட்டம் அதுவும் ஏறக்குறைய 420 நாட்கள் [illegible] சித்தி பெற்ற விஷயமாகும்"

இவ்வாறு இ. தொ. கா. தலைவர் திரு கே. இராஜலிங்கம் பேசுகையில் கூறினார்.

கலகா ஜில்லாக் கமிட்டித் தலைவர் திரு என். எம். பழனிச்சாமி தலைமையில் நடந்த இக்கூட்டத்திலே திருவாளர்கள் எம். சோமசுந்தரம், வி. அண்ணாமலை, எம். அருணாசலம், ஆரோக்கியநாதன், ஸ்ரீமதி ஜே. ராமசுப்ரமணியம் ஆகியோரும் பேசினர்.

---


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 18 பொயின்ட் ரோமன், 18 பொயின்ட் போல்ட், 10 பொயின்ட் ரோமன், 10 பொயின்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் டைப் பவுண்டரியில் உற்பத்திசெய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக திரவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயின்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.


நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப் பட்டியலுக்கும் எழுதவும்:

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்தஎழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் டைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு — 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் திரைகளில் விரைவில் வெளிவருகிறது!**



லலிதா பிலிம்ஸாரின்

# மாதர்குல மாணிக்கம்

நடிகர்கள்

**ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி
சாவித்திரி, நாகேஸ்வரராவ், ரங்கராவ்
தங்கவேலு, சாரங்கபாணி,
எம் என். ராஜம் கண்ணும்பா,
பிரண்ட் ராமசாமி**

மற்றும் பலர்



---

களிப்பூட்டும் 3-வது வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

மாடர்ன் தியேட்டர்ஸாரின்

# பாசவலை



நடிகர்கள்:

**எம். கே. ராதா, ஜி. வரலெட்சுமி,
எம். என். ராஜம், ஏ. கருணாநிதி,**

வி. கோபாலகிருஷ்ணன், வி. கே. ராமசாமி, சாயிராம் மற்றும் பலர்.

**ஈ. வி. சரோஜாவின் உன்னத நடனங்கள்!**

பின்னணி இசை:

திருச்சி லோகநாதன், ஜெயராமன், ஜிக்கி, லீலா முதலியோர்.

இப்பத்திரிகை கொழும்பு தட்டார தெரு 1[illegible] இலக்கத்தில் வசிக்கும் [illegible] அவர்களால் [illegible] நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்
ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டார தெரு [illegible] 1957 பெப்ரவரி மாதம் 17ம் திகதி பிரசுரம்செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org